மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 11 / அக்டோபர் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-







## கீழடி
## தமிழர் தொன்மை



உலக சேம்பியன்
பட்டம் வென்ற
தமிழகத்தின்
வீர பெண்மணி
ஜெர்லின் அனிகா

# கீழடியில் கிளைவிட்ட வேர்

## சிறப்புக் கருத்தரங்கம்

நாள் : **8.12.2019, ஞாயிற்றுக்கிழமை, மாலை 5.00 மணி**

இடம் : **தி சால்வேஷன் ஆர்மி (HRD) அரங்கம்**

வேப்பேரி நெடுஞ்சாலை, 8, பெரியண்ண மேஸ்த்திரி தெரு, பெரியமேடு, சென்னை – 3



வரவேற்புரை : **பாவலர் கவிபாஸ்கர்** தலைவர், த.க. இ.பே

தலைமை : **பாவலர் முழுநிலவன்** பொதுச்செயலாளர், த.க.இ.பே.

கீழடித்தொன்மை : புகைப்பட கண்காட்சி திறப்பாளர்

திரைக்கலைஞர் **பொன்வண்ணன்**

(இயக்குநர் – நடிகர் – ஓவியர்)

உரை வீச்சு

**“மண்மூடிய தமிழர் வாழ்வு”**

ஆய்வறிஞர் **அமர்நாத் இராமகிருஷ்ணன்**

இந்தியத் தொல்லியல்துறை, கீழடி ஆய்வறிஞர்

**“மாண்டவர்களின் மறுபிறப்பு”**

தமிழ்த்திரு. **பெ.மணியரசன்**

தலைவர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்

நன்றியுரை : **பாவலர் பிரகாசு பாரதி**



அனைவரும் வருக!

**த.இரவீந்திரன்**

புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி

## தமிழ்க் கலை இலக்கியப் பேரவை

+91 96772 29494 / +91 9841604017

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly November 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
செய்தி ஆசிரியர்
**ம. வில்லியம் எபனேசர்**
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**ஜெயவேல்**
**க. பவானி** எம்.ஏ.,
**ஜான் ஜெயராமன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**அரவிந்த்**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**ஜோ.எஸ்தர்ரோஸ்லின்** பி.இ.,
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

நீரின்றி அமையாது உலகு
– தலையங்கம்.................................................... 4

நரகனைக் கொன்ற நாள் நல்ல நாள் விழாவா?
–முனைவர் தொ. பரமசிவம்.................................................... 5

அகத்தியர்
திரு.கா.நமசிவாய முதலியார் நிகழ்த்திய சொற்பெருக்கு..................... 6

கீழடி – தமிழர் தொன்மையின் அடையாளம்.......................................12

சங்கத் தமிழிழில் இறை (சென்ற இதழ் தொடர்ச்சி)............................ 16

மண்டல் கமிசன் பரிந்துரையின் படி
மீனவ மக்களை பழங்குடி இனப்பட்டியலில் சேர்த்திட
தமிழக தழுவிய அரசியல் எழுச்சிப் பரப்புரை!
– எஸ்.பிரவீன் குமார் பரதவர் ................................................24

புதிய மாவட்டங்கள்
– ஜோ. எஸ்தர் ரோஸ்லின் பி.இ., ..............................................28

கம்போடியர்களின் நீர் மேலாண்மை................................................ 29

அருந்தலைவர் இரா. நல்லகண்ணு ..................................................31

பக்கங்கள் வென்று இந்தியாவுக்கு
பெருமை சேர்த்த மாற்று திறனாளி
ஜெர்லின் அனிகா ............................................................34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# நீரின்றி அமையாது உலகு

இந்த ஆண்டு தமிழகத்தில் மழை போதுமான அளவு இருக்கும் என்று வானிலை முன்னறிவிப்புகள் கூறின. அதைப் போலவே மழை பெய்திருக்கிறது. பெய்யும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது. பல ஆண்டுகளாக மழை இல்லாமல் இருந்த நிலங்கள் எல்லாம் இப்போது மழையைக் குடித்து மகிழ்ந் திருக்கின்றன.

நீரின்றி அமையாது உலகு என்ற முதுமொழியின் உண்மையை உலகம் புரிந்து கொள்ளத் தொடங்கி யிருக்கிறது. என்றாலும், நீர் நமக்குத் தொடர்ந்து கிடைத்திட என்ன செய்ய வேண்டும் என்ற முன் காப்புச் செயல்கள் செய்யப்படாமலே காலம் கழிகிறது.

முன்பெல்லாம் காளைமாடுகளை பயன்படுத்தி உழவு செய்தோம். அப்போது வயல்களின் வரப்பு உயரமாக இருந்தது. தண்ணீர் நிலங்களில் பல நாட்கள் நின்றது. விளைவு நிலத்தடிநீர் உயர்ந்தே இருந்தது. இப்போது இயந்திரங்களை வைத்து உழுவதால் வரப்புகளே இல்லாமல் போய்விட்டது. வரப்பு இல்லாத இடத்தில் எப்படி தண்ணீர் நிற்கும். நிலத்தடி நீர் எப்படி இருக்கும்?

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும், கோல் உயர கோன் உயர்வான் என்ற உயர்தமிழ்ச் செய்யுளுக்கு புறமுதுகு காட்டிக் கொண்டிருப்பதால்தான் மழையும் குறைந்தது, நிலத்தடி நீரும் குறைந்தது, விளைச்சலும் குறைந்தது, மன நிறைவும் குறையத் தொடங்கியது. உழவுத் தொழிலில் நீருக்கு இருக்க வேண்டிய இன்றியமையாமையை உள்ளுணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். அரசும் அதை கவனிக்க வேண்டும். உழவர்களுக்கு உதவ வேண்டும்.

நகரங்களில் நிலங்களும் நீர்நிலைகளும் கட்டடங் களாக மாறி விட்டாலும் கூட, மற்ற பகுதிகளில் இருக்கும் நீர்நிலைகளில் தண்ணீரைத் தேக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். புதிய நீர்த் தேக்கங்களையும், ஏரிகள், குளங்களை ஏற்படுத்தும் வேலைகளை அரசு துரிதமாகச் செய்ய வேண்டும்.

அறிவாளிகள் நீரைக் கொண்டுதான் உலக மக்களை அச்சப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் நீர் இல்லாமல் போகும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இதை அனைவரும் கருத்தில் கொண்டு நீராதாரங்களை அதிகப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வாழ்வளிக்க செயல்களில் இறங்குவோம்.





# நரகனைக் கொன்ற நாள், நல்ல நாள் விழாவா?

தீபாவளி கொண்டாடுவது யார்? யாருக்காக? இன்று தமிழ்நாட்டில் விறுவிறுப்பாகக் கொண்டாடப் பெறும் திருவிழா தீபாவளியாகும். நகர்ப்புறம் சார்ந்ததாகவும், துணி, எண்ணெய், மாவு, பட்டாசு ஆகிய பெருந்தொழில்களின் பொருளாதாரம் சார்ந்ததாகவும் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. தகவல் தொடர்புச் சாதனங்கள் தரும் பகட்டான விளம்பரங்களால், இது தமிழர்களின் "தேசியத் திருவிழா" போலக் காட்டப்படுகிறது.

தீபாவளி தமிழ் நாட்டின் மரபு வழிப் பொருளாதாரத்தோடும் பருவநிலைகளோடும் தொடர்பில்லாத ஒரு திருவிழாவாகும். பார்ப்பனீயத்தின் பாதிப்புகளில் இருந்து இன்னமும் விலகி நிற்கிற சிற்றூர்களில் தீபாவளி கொண்டாடப்படுவதில்லை. தீபாவளியைக் குறிக்கும் வெடி, அதன் மூலப் பொருளான வெடி மருந்து ஆகியவை தமிழ் நாட்டிற்கு 15ஆம் நூற்றாண்டு வரை அறிமுகமாகவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

விளக்குகளின் வரிசை எனப் பொருள்படும் தீபாவளி (தீப ஆவளி) என்னும் வட சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லும் புழக்கத்தில் இல்லை. தமிழர்களின் விளக்குத் திருவிழா என்பது திருக் கார்த்திகைத் திருவிழாவே ஆகும். நரகாசுரன் என்னும் அரக்கன் கிருசுணனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தீபாவளிக் கதை தமிழர் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக இன்று பிராமணிய மதத்தின் சார்பாக எழுந்த கதையாகும். இந்த நாள் பிராமணிய மதத்தின் எதிரியான சமண மதத்தின் 24ஆம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறடைந்த (இறந்த) நாளாகும். தான் இறந்த நாளை வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடுமாறு மகாவீரர் தம் மதத்தைவரைக் கேட்டுக் கொண்டார். ஆகவே, பிராமணிய மதத்தின் பழைய எதிரிகளான சமணர்களும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். எனவே நரகாசுரன் அழிந்ததாக பிராமணியத் தீபாவளிக் கதைகள் குறிப்பிடுவது மகாவீரர் இறந்த நாளையே ஆகும். விசய நகரப் பேரரசான இந்து சாம்ராச்சியம் தமிழ்நாட்டில் நுழைந்த கி.பி. 15ஆம் நூற்றாண்டு தொடங்கியே தீபாவளி இங்கு ஒரு திருநாளாகக் கொண்டாடப் படுகிறது.

இந்தக் காரணம் பற்றியே தமிழ் பிராமணர்களை விட, தமிழ் நாட்டில் உள்ள தெலுங்குப் பிராமணர்களே தீபாவளியைப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகின்றனர். வடநாட்டு இந்துக்களிடமும் சமணர்களிடமும் இல்லாதபடி தமிழ்நாட்டில் இத்திருவிழா நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பது தமிழ் நாட்டில் நீத்தார் நினைவில் இறதி நாளைக் குறிக்கும் சடங்காகும். தமிழ் நாட்டுப் பிராமணர்களும் இத்திருவிழாவை இறந்தால் இறுதிச் சடங்கு போல, "கங்கா சுநானம்" செய்து கொண்டாடுவது குறிப்பிடத் தக்கது. ஆகவே உண்மையில் இத்திருவிழா பார்ப்பனிய மதத்தின் திருவிழாவேயன்றித் தமிழர் திருவிழா ஆகாது.


நரகனைக் கொன்ற நாள் நல்ல நாள் விழாவா என்று பாரதிதாசன் பாடுவதும் இங்கே நினைவுக் குரியது.

முனைவர். **தொ.பரமசிவன்,**

அறியப்படாத தமிழகம் என்ற நூலில் இருந்து.

# அகத்தியர்

## திரு.கா.நமசிவாய முதலியார் நிகழ்த்திய சொற்பெருக்கு



"எல்லாம் கடவுள் செய்ய வல்லவர். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை அதுபோலவே முனிவர்களும் கடவுள் தன்மை வாய்ந்தவர்கள். அவர்களாலும் ஆகாத செய்கை எதுவுமில்லை. அவர்கள், அணுவை மலையாகவும், மலையை அணுவாகவும் மாற்றவல்ல ஆற்றலுள்ளவர்கள்" என்னுங் கருத்துக்கொண்ட நண்பர்களுக்கு யான் ஏதும் சொல்லவல்லே னல்லேன். அவ்வாறன்றி முனிவர்கள் மானிட வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்கள் சிறந்த அறிவு வாய்ந்தவர்கள் என்று மட்டும் கொள்ளத் தகுந்தவர்களுக்கு யான் கூறப் புகுந்த இவ்வாராய்ச்சி பொருந்துவதாகும். மாந்தரைக் கடவுளாகவே எண்ணிவிட்டால் அவர்கள் எல்லாம் செய்ய வல்லவர்கள் தான் என்றே கருத வேண்டும். அவர்களைச் சிறந்த அறிவுடையவர்களாக எண்ணினாற்றான் ஆராய்ச்சி என்பது பொருந்தும்.

புராணக் கதைகளெல்லாம் ஒரு காலத்து ஒருண்மையைப் புலப்படுத்த உண்டானவை. அவற்றில் உண்மை சிறிது பொய்மை பெரிதும் கலந்திருக்கும். அவ்வுண்மையும் வெளிப்படையாகப் புலப்படாதவாறு பெரும்பாலும் உருவகங்களாக அமைக்கப்படும். அவ்வுருவகங்கள் சில இடங்களில் தெளிவாகப் புலப்பட பலவிடங்களில் அவை அவ்வாறு புலப்படாது மறைந்து கிடக்கும். அவ்வகையில் அகத்தியனாரைப் பற்றிய உண்மைக் கூற்றுகளையும் பொய்மை மலிந்த புராணக் கதைகளையும் ஈண்டு ஆராய்வோம். இதன் பொருட்டே இன்று அகத்தியர் என்பதை யான் எடுத்துக்கொண்டது.

அகத்தியரைப் பற்றிய செய்திகள் முதற்கண் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றன. இருக்கு வேதமே வடமொழியில் மிகப் பழமையான நூலென்ப, ஆகவே அதிற்காணப்படும் அகத்தியனாரும் மிகப்பழமையான முனிவர் என்பது பெறப்படும். நமது நாட்டில் சமீப காலத்தில் தோன்றிய கம்பர் முதலானவர் களுடைய

பிறப்பு வளர்ப்பு முதலியவைகள் இன்றும் நன்கு தெரிந்தபாடில்லை. அப்படியிருக்க நீண்ட காலத்துக்கு முன்னரே இருந்தவராகக் கொள்ளப்படும் அசாத்திய மேயாகும். அவ்வாறிருப்பவும் அவரைப் பற்றி ஆராயப்புகுந்தது எதற்கோ எனின், தமிழராயினர் அனைவரும் முதற்கண் அறியுஞ்சரித்திரம் அகத்திய னார் சரித்திரமாகுமென்பதே.

யான் எவரும் இறங்காத துறையில் இன்று இறங்குகின்றேன். அவ்விடத்து என்ன ஏற்படுமோ அறியேன். ஆதலின் யான் கூறும் செய்திகளுள் உண்மை இருத்தல் கூடுமோ அல்லது பொய்ம்மை இருத்தல் கூடுமோ என்பதை அறிஞர்களாகிய நீங்கள் ஆராய்ந்து, கொள்ளுதல் வேண்டும் யான் சொல்லு வதில் காணப்படும் குற்ற நற்றங்கள் ஒருபால் இருப் பினும், யான் ஆராயப்புகும் முறை சரியானதென்று தோன்றுமாயின், அதுவே யான் இன்று செய்யும் உபந்நியா சத்துக்குத் தக்க பலனாகும்.

நம்முடைய நாட்டில் தெரிந்தோ, தெரியாமலோ, சில கருத்துக்கள், நிலையாக அவரவர் மனத்தில் ஊன்றியுள்ளன. அத்தகைய செய்கைகளைக் கேட்கும் பொழுது, அவை உண்மையாயிருத்தல் கூடுமோ என்று ஆராய்வதில்லை ஆராயும் பருவம் வருவதற்கு முன்னரே இத்தகைய செய்திகள் அவர்கள் மனதில் ஏறிப்பதிந்துவிட்டன வென்றால், ஆராயும் பருவம் வந்த பின்னரேனும், முன்னர்க் கேட்டறிந்த செய்திகள் உண்மையாயிருந்தால் கூடுமோவென்று ஆராய்ந்து பார்ப்பதில்லை. அன்றியும் ஒரேவிதமான கதை இரண்டு நூல்களில் வேறுபட்டுக்காணப்படின், அவற்றுள் முந்தியது எது, பிந்தியது எது, அக்கதை களுள் காணப்படும் வேற்றுமைகள் யாவை, என ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்க்கும் அனுபவமும் நமக்கு இல்லையென்றே சொல்லாம். உதாரணமாக, மதுரைப் புராணத்தை உணர்த்தும் திருவிளை யாடல்கள் இரண்டை எடுத்து ஆராய்வோம். ஒன்று பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடல், இவ்விரண் டிலும் கதையில் வேற்றுமைகள் அங்கங்கே காணப் படுகின்றன. திருவிளையாடல்களும் ஒன்று கொன்று இடம் மாறுபட்டுக் காண்கின்றன. வாதவூரடிகள் புராணத்தில் வரும் செய்திகளுக்கும் இவ்விரண்டு புராணங்களில் அவரைப் பற்றி வரும் செய்திகளுக்கும் வேற்றுமைகள் மிகப்பல. இவற்றுளெல்லாம் பெரும்பற்றப் புலியூர் நம்பி செய்த திருவிளையாடற் செய்திகள் பெரும்பாலும் அறிஞர் ஒப்புக்கொள்ளக் கூடியனவாம். இந்நூலை பிரம்மஸ்ரீ மஹா மஹோ பாத்தியாய சாமிநாதையர்வர்கள் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் வெளியிட்டிராவிட்டால், இவ்வகைய அருங்குறிப்புகளுடன் வெளியிட்டிராவிட்டால், இவ்வகைய அருஞ்செய்திகளும் நமக்குத் தெரியாமற் போயிருக்குமன்றோ? அது போலவே, எத்தகைய ஆராய்ச்சிகளுக்கும் சரித்திர வேறுபாடுகள் காணுமா யின், அவற்றை அடிப்படையாகக் கொண்டு உண்மை காண முயலுதல் அறிஞர் கடனாகும். அவ்வாறின்றி அது ஒரு யுகத்தில் நடந்தது, இது ஒரு யுகத்தில் நடந்தது என்று யுகம்யுகமாகப் புரட்ட வல்லவர்களுக்கு எவ்விதமான உண்மைகள் விளங்கும்? இவ்வகையில் அகத்தியனாரைப் பற்றி என் சிற்றறிவுக் கெட்டிய வரையில் ஆராயத்தொடங்குகின்றேன்.

அகத்தியனாரைப் பற்றி இருக்கு வேதத்தில் வருஞ் செய்திகள்: முதலாவதாக அகத்தியர் என்னும் பெயர் முதற்கண் குறிக்கப்பட்டுள்ளது அப்பெயருக்குத் தெளி வான பொருள் இதுகாறும் தெரிந்தபாடில்லை சிலர் மலையை அடக்கினவர் எனப் பொருள் கூறுகின்றனர். அப்பெயருக்கு அப்பொருள் உளதாயின் உண்மையான தாயின் அம்முனிவர் விந்திய மலையை அடக்கிய பின்னர் உண்டானதாக இருத்தல் வேண்டும். விந்திய மலையை அடக்கிய செய்தி கந்தபுராணத்தில் வரும் கதையாதலின், அதற்கு முற்பட்டதாகிய இருக்கு வேதத்தில் இப்பெயர் வரக் காரணமில்லை. ஆகவே அது சற்றும் பொருந்தாத கூற்று என்ப,

இரண்டாவது, “மான“ என்பவருடைய புதல்வராக, “மான்ய“ என்னும் பெயர் பெற்றதாகக் காண்கின்றது. இப்படியிருக்க பிரமதேவன் உருப்பசியின் நடனத்தைக் கண்டு தன் வீரியத்தைவிட அகத்தியர் பிறந்தனரென்று காவிரிப் புராணம் கூறும். புலத்தியருக்கு ஆவிர்ப்பூ வினிடத்தில் அகத்தியரும், விச்ரவசுவும் தோன்றினர் என்றும் புராணங் கூறும். கந்தர்வர் உருப்பசியினிடம் உண்டான காம மிகுதியால் கும்பத்தினிடம் வீரியத்தை விட்டும் உண்டானார் என்று மற்றொரு புராணம் கூறும். அது ஒருவாறு ஒப்புமை யுடையதேயாயினும், வருணமித்திர என்பவருக்கு அகஸ்தியனாரும், வசிட்டரும் பிறந்ததாகப் பின்னே அதே நூலினின்றும் கிடைப்பதனால், இவை இரண்டனுள் எது உண்மையு டையதென்று புலப்படவில்லை. வருண மித்திரர் களுக்கு அகத்தியரும், வசிட்டரும் பிறந்த கதை நம்பக் கூடியதன்றாம்.

மூன்றாவதாக அகத்தியனார் இந்திரனை விலக்கி, மருத்துக்களுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க நினைத்தனர். அதனால் இந்திரன் பெரிதும் வருந்த, அவனுக்கும் மருத்துக்களுக்கும் இவர் சமாதானம் செய்வித்தன ரென்றும் சொல்லப்படுகிறது. இச்செய்தியே பிராமணங்களிலும் காணப்படுகிறது.

நான்காவது, அகத்தியனார்க்கும் லோபா முத்திரை என்பவளுக்கும் ஒரு சம்பாஷனை நடக்கின்றது. அவள் தன்னை மணந்து கொள்ள வேண்டுகிறாள். அதில் முதற்கண் அகத்தியனார் தாம் ஒரு முனிவர் என்று கூறி, அவளை மேற்கொள்ள மறுத்தனரென்பதும்,

பின்னர் அவள் பேச்சு வன்மையால் அவளுடைய வலையில் பட்டு அவளை மணந்தனரென்பதும் தெளிவாகின்றது.

அய்ந்தாவது, விஸ்பலா என்பவளுக்கு அசுவனி தேவதைகளைக்கொண்டு ஒருகாலைக் கொடுக்கும்படி உதவி செய்தனர்.

கேலா என்பவளுக்கு இவர் புரோகிதராய் அமைந்திருந்ததாகச் சாயனார் கருதுகின்றார்.

**மற்றைய செய்திகள்**

பின்னர், புராணத்தில் வரும் செய்திகள் மிகப் பல. அவை வருமாறு: இவரைப் பற்றிய கதைகள் கந்தபுராணம், மச்ச புராணம், திருநெல்வேலிப் புராணம், திருவிளையாடற் புராணம், காசிகண்டம், திருக்குற்றாலப் புராணம், பழனித் தலபுராணம், காவிரிப் புராணம், திருச்செங்கோட்டுப் புராணம், அவிநாசிப்புராணம், தேவி பாகவதம் என்னும் புராணங்களிலும், இராமாயணம் என்னும் இதிகாசத்திலும் காண்கின்றன. இவையேயன்றி, தொல்காப்பியப் பாயிர உரையிலும், பரிபாடலிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், வருகின்றன. இனி, ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது ஆராய்வோம். தாரகன் முதலிய அசுரர்கள் உலகை வருத்தினார்கள். இந்திரன் அவர்களை அடக்க அக்நியையும், கடல் நீரை வற்றச் செய்து அசுரர்களை வெளிக்காட்டாமல் மயங்கி இருந்தனன். இந்திரன் கோபங் கொண்டு அக்நியைப் பூமியில் பிறக்கும்படி சபித்தான். ஆகவே அக்கினி அகஸ்தியாக ஒரு கும்பத்தில் தோன்றினார் என்பது மச்ச புராணங் கதை இதனால் அகத்தியருக்குக் கும்பமுனி, கும்பயோனி முதலிய பெயர்கள் உண்டாயின. இக்கதை எவ்வளவு உண்மையுடையதோ என்பதை நீங்களே ஆராயுங்கள். இது உண்மையன்றாயின், அகத்தியர் வரலாறே தலைகாட்டாது ஓடும்.

2. சிவபெருமான் இமயமலையில் உமாதேவியை மணக்க இருந்த காலத்தில், தேவர் முனிவர் முதலாயினோர் அண்டுக்கூடினர். கூடவே, வடதிசைகனத்துத் தென்திசை புல்லென்றாகி, வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்தது உயரவே, தேவர், முனிவர் முதலாயினர் அச்சுற்று நடுங்கினர். அக்காலத்தே சிவபெருமான் முனிவரைக் கூவி, நீர் சென்று தென்திசையிலுள்ள பொதியிலில் அமர்ந்தால் பூமி நிலைத்து விடுமென்றார். ஆகவே, அகத்தியனார் தென்திசை போந்தனர். வருகிற வழியில் விந்தியமலை கர்வங் கொண்டு ஆகாயமளாவ ஓங்கி அகத்தியனார்க்கு வழிவிடாதிருந்தது. அகத்தியர் அதன் உச்சியிற் கைவைத்து அழுத்தித் தான் தென்னாடு விட்டு வருந்தனையும் இவ்வாறிருக்க எனக் கூறிச்சென்றார். இடையில் வாதாபி வில்வலன் என்ற அசுரர் இருவர் முனிவர்களுக்குத் துன்பஞ்செய்திருந்தனர். எவ்வாறெனில் வில்வலன் வாதாபியை ஆடாக்கி அதைக்கொன்று சமைத்து முனிவர்களுக்கு இட்டு, அதையுண்ட பிறகு வாதாபி வருக என்றழைப்பான் வாதாபியும் வயிற்கைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். அதனால் விருந்துண்ட முனிவர்கள் இறந்து படுவர். அவ்வாறே அகத்தியனார்க்கும் விருந்திட்டான். வில்வலன் பின்னர், வாதாபி வருக என்றான். அவன் வெளிவருவதற்குள் அகத்தியனார், ஜீர்ணாபி என்றார். அவன் அவ்வாறே ஜீரணமாகி இறந்துபட்டான். பின்னர் அகத்தியனார் தென்னாடு போந்து, பொதிய மலையில் அமர்ந்து வசிக்கலாயினர் அதனால் பூமி சமநிலையுற்றது.

இக்கதையுள் மூன்று செய்திகள் காணப்படுகின்றன. ஒன்று பூமி தலைகீழானது. இரண்டு விந்தியம் அடக்கப் பெற்றது, இவற்றுள் முற்கதை முற்றும் நம்பத்தக்கதன்று. எவ்வாறெனில், இக்கதையிலுள்ளவாறே கொள்ளலாகாதோ எனின், பூமி தட்டையாக இருக்கிறதென்பதும், அதன் மத்திய பாகத்தை ஒருகோல் தாங்கிக் கொண்டிருப்பதென்பதும் பெறப்படுதலானும், உலகங்களை அண்டங்களென்று நமது சாஸ்திரங்களே கூறுவதனாலும், அது பொருந்தாது என்க, அதுவுமின்றி உலகத்திலுள்ள மலைகளிளெல்லாம் மிகப் பெரிய தாக்கி உயர்ந்துள்ள இமயமலையொன்றே பூமியை எப்பொழுதும் கவழ்த்துவிடக் கூடுமல்லவா? அதனால் இக்கூற்று வெறுங்கூற்றென்பது பெறப்படும். அன்றியும் அறிஞர்கள் எல்லாம் வடதிசை அடைந்தமையால், அறிஞர்களின்றித் தென்திசை புல்லெனப் போயிற்றிறென்பதை இவ்வாறு உருவகஞ் செய்தனர் அகத்தியத்தைச் செய்தனர் என்பதும் பொருந்தாத கூற்றாகும். ஏனெனின் தமிழறிஞர்கள் இந்நாட்டில் இருந்தனர் என்பதும் அது கொண்டே அகத்தியனார் இலக்கணம் செய்தனரென்பதும் புலனாமன்றோ!

இரண்டாவது, விந்தியமலை மேருமலையோடு மாறுபட்டு ஆகாயம் வரையில் உயர்ந்து நின்றது என்பது கதை. ஆயினும் இம்மலையில் வசித்த மாந்தர்கள் அகத்தியனாரைச் செல்லவொட்டாமல் தடுத்திருக்கலாம். அவர்களை அடக்கி இவர் தென்றிசை சென்றிருக்கலாம். இடவாகு பெயராகி இதனை இவ்வாறு கற்பித்துவிட்டனர் போலும்!

மூன்றாவது, அகத்தியனாருடைய அபார சக்தியை விளக்குவதற்கு எழுந்த வாதாபி, வில்வலன் கதையை அம்மட்டே ஒதுக்கிச் செல்வோம்.

3. அகத்தியனார் சுப்பிரமணியரிடத்துத் தமிழ் நாட்டைப் பெற்று பாண்டியனுக்குக் கொடுத்தனர் என திருநெல்வேலிப் புராணம் கூறும். இந்திரனோடு மாறுபட்ட விருத்தாசுரன் கடலில் ஒளித்துக்கொள்ள, இந்திரன் அகத்தியனாரை வேண்டினான் அகத்தியர்

கடலைப் பானம் பண்ணி விருத்திரா சுரனை இந்திரனைக் கொண்டு கொல்வித்து, மறுபடியும், கடல் நீரை விடுத்தனர் என்று திருவிளையாடற் புராணம் கூறும். இக்கதை மச்சபுராணக் கதையோடு ஒருவாறு ஒற்றுமையுடையது. ஆயினும், ஒளித்துக்கொண்ட விருத்திராசுரனைக் காட்ட, பூமியைப் போல் மூன்று பங்காக உள்ள இக்கடலைக் குடிக்க வேண்டுமா? இவ்வளவு சக்தியுள்ள அகத்திய முனிவர், விருத்திரா சுரன் இருக்குமிடத்தை அறிந்து, அவனை இழுத்து வெளியிற் போடலாகாதா? சமுத்திரம் என்பது ஒரு ஏரியா, குளமா, கால்வாயா? அறிஞர்களே! இதனை உய்த்துணருங்கள்.

4. பின்னர் நகுஷன் சர்ப்பமான கதையும் திருவிளையாடலில் வருகின்றது. அது காமுகன் அல்லற்பட்டு அழிவன் என்ற செய்தியை விளைக்க வந்ததாகும். ஸப்த ரிஷிகளில் இவர் ஒரு வரல்லர் என்று தெரிகிறது.

இவ்வாறே பற்பல புராணக் கூற்றுக்கள் பரந்து கிடக்கின்றன. இவையெல்லாம் தல புராணங்கள், தல புராணங்களை ஒரு ஆதாரமாகக் கொள்ளுதல் பொருந்தாதென வடமொழி வாணரே கூறுவர். அங்ஙனமாயின் வடமொழியினின்றும் மொழி பெயர்க் கப்பட்டதாகக் கூறப்படும் தமிழ்ப் புராணங்களின் தன்மை எப்படிப்பட்டதென்பதை நிங்களே உய்த்துண ரலாம். இனி இதிகாசமாகிய இராமாயணத்திற் கூறப்படும் செய்தியைக் கவனிப்போம்.

ஸ்ரீராமன் சீதையுடன் காடு சென்ற காலத்தில், அகத்தியாச்ரமத்தை யடைந்தனர். அது நாஸிக்குச் சமீபத்தில் உள்ளது. அங்கே சென்ற இராமர் அஸ்திரம் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு பஞ்சவடியில் பிரவேசித்தனரென்பது இராமாயணத்திற் காணும் செய்தி. இதைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம். அத்திரி மஹரிஷி ரியாச்ரமத்தில் அனுசூயால் சீதை பல வரங்கள் பெற்றனவென்று கூறப்படுதல் போல, இங்கே லோபாமுத்திரையின் பெயருங் குறிக்கப்பட்டாமை கவனிக்கற்பாலது.

**அகத்தியரும் சங்க வரலாறும்**

இனி, அகத்தியனார் தென்னாடு போந்து தமிழுக் குச் செய்த நன்மைகள் எவை என்பதைப் பற்றி ஆராய்வோம் அகத்தியர் பொதிக மலையிலிருந்து சில பாண்டியரின் உதவியைப் பெற்று முதற் சங்கம், இடைச் சங்கமென்னும் இரண்டு சங்கங்களை நிறுவினார். முதற் சங்கத்திலிருந்த புலவர்கள் அகத்தியனாரும். திருபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், முறைஞ்சியூர் முடிநாகராயரும், நிதியுன் கிழவனும் என இத்தொடக்கத்தார் அய்ந்நூற்று நாற்பத்தொன் பதின்மர் என்ப. அவர் 4440 யாண்டு சங்கமிருந்தார் என்பர். இதனுள் சிவபெருமானும், முருகக் கடவுளும், குபேரனும் ஆகிய தெய்வங்கள் அங்கத்தினராக இருந்தன ரென்பதும் பெறப்படும். முடி நாகராயர் என்பவர் ஒருவர் இருந்ததாகவும் தெரிகிறது. இவருடைய பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது. ராயர் என்னும் சொல் பிற்கால வழக்கிலுள்ளது. அதுமுதற்சங்கத்திலேயே பயின்று வந்த தென்பது பொருந்தாத தொன்றாகும். ஒருகால் அது முடி நாகரையர் என இருத்தல் கூடுமோ என்று ஊகிக் கின்றேன். இவர் நாகவேந்தராக இருத்தல் கூடுமோ என்பதும் கருதத்தக்கது.

இனி, இரண்டாஞ் சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர் கருங்கோழி மோசியும். வெள்ளூர் காப்பியனும், சிறு பாண்டரங் கனும், திரையன்மாறனும், துவரைக்கோமானும், சீரந்தையும் என இத்தொடக்கத்தார் அறுபத்தொன்ப தின்மர் என்ப. இவர் மூவாயிரத்து எழுநூறுயாண்டு சங்கமிருந்தார் எனக் கூறப்படுகின்றது. இவர்களுள் மாந்தர் பலர். துவரைக்கோமான் என்பது துவார காபு ரிக்குத் தலைவன் எனப் பொருள்பட்ட கிருஷ்ண மூர்த்தியை உணர்த்தும் போலும். இவ்வாறு தெய்வங் களை அங்கத்தினராகக் கொள்ளுதல் எவ்வளவு ஒற்றுமையுடையதோ, அறிஞர்களே! ஆராய்மின்.

இரண்டு சங்கமும் இருந்த காலம் 8140 யாண்டு களாகும். இவ்வளவு நெடுங்காலம் அகத்தியனார் ஒருவரே இருந்தனர் என்பது பொருந்துமோ? சங்கம் என்னும் சொல் ஒன்றே அக்காலத்துச் சங்கமிருந்ததில்லை என்பதை வலியுறுத்தும். சகரம் மொழிக்கு முதலில் வாராது என்பது தொல்காப்பியச் சூத்திரம். ஆகவே, இது அசம்பாவிதமென ஒதுக்கற் பாலதாம். இவ்விரண்டு சங்கங்களுக்கும் அகத்தியம் இலக்கணமாயிருந்தது. அவ்வகத்தியத்தின் வரலாறு என்ன என்று ஆராய்வோம்.

அகத்தியம் அகத்தியனாரால் செய்யப்பட்ட இலக்கணம். இது இயல், இசை, நாடகமென்னும் மூன்று தமிழுக்கும் செய்யப்பட்ட இலக்கணமாம். ஆனால், தொல்காப்பியனார் இயற்றமிழுக்கே இலக்கணம் கூறத்தொடங்கி, தொல்காப்பியம் என்னும் நூலைச் செய்தனர் என்பர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியனாரால் சபிக்கப் பெற்று அகத்தியம் இறந்து பட்டது என்பர் சிலர், இக்கதையைப் பின்னர் ஆராய்வோம். இக்கூற்றுள் சில ஐயப்பாடுகள் நிகழ்கின்றன. நாடகம் என்பது தமிழ்ச் சொல்லன்று, ஆகவே, நாடகத்திற்கு இலக்கணம் இயற்றினார் என்பது எவ்வாறு பொருந்தும். சங்கச் செய்யுள் களெல்லாம் ஒவ்வொரு செய்தியைக் குறிக்க ஒவ்வொரு பாடலாக அமைந்துள்ளன. தொடர் நிலைச் செய்யுளாக வந்த காதைகள் ஏதுமில்லை. நாடகம் என்பதற்குக் கூத்து என்னலாமோவெனின், நாடகத் துக்கும், கூத்துக்கும் பெரிதும் வேற்றுமையுள்ளது.

கூத்து என்பது சிலர் சேர்ந்து பாடியாடும் நிலைமைக்கு வந்துள்ளது. நாடகமென்பது தொடர் நிலையாகி வரும் கதையை எடுத்துக்காட்டி நடிப்பது. பிற்காலத்தேதான் தெருக்கூத்து முதலியவை நாடகம் என்னும் பொருளில் வந்துள்ளது. இவ்வாறு இருப்பவும், அகத்தியனார் நாடகத்துக்கு இலக்கணம் செய்தார் என்பது எவ்வாறு பொருந்தும்?

இனி அகத்தியம் இறந்துபட்டதற்குக் காரணம் கூறுவோம், அகத்தியனார் தம் மாணாக்கராகிய தொல் காப்பியனாரை நோக்கி, நீ சென்று லோபா முத்திரை யாகிய என் மனைவியை அழைத்து வருக! என்றனர். எவ்வாறு அழைத்து வருவது எனத்தொல்காப்பியனார் அகத்தியனாரைக் கேட்டார். முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று அழைத்து வருக" என்றார். அவ்வாறே சென்று தொல்காப்பியர் லோபா முத்திரையை அழைத்து வருவாராயினர். அழைத்து வருபவர் மதுரைக்கு அருகில் வருகிறபொழுது, வைகையில் வெள்ளம் வந்து லோபா முத்திரையை அடித்துக்கொண்டு போகவே, தொல்காப்பியனார் அஞ்சி அங்கே இருந்த மூங்கில் ஒன்றினை முறித்து, ஆறு இழுத்துச் செல்லும் லோபா முத்திரையின் கைக்கு நீட்டினார். அவள் அதைப் பிடித்துக்கொண்டு கரையேறினாள். பின்னர் இருவரும் சென்று அகத்தியனாரைக் கண்டு தமக்கு நேர்ந்த இன்னலைக் கூறினர். அப்போது அகத்தியனார், “என் கட்டளையை மீறி நடந்தீராதலின் நீர் சொர்க்கம் போகாதிருப்பீர்" என்று சபித்தார். ஒரு குற்றமும் அறியாத எங்களை இவ்வாறு சபித்தமையின், “நீரும் சொர்க்கம் புகாதொழிக எனத் தொல்காப்பியனார், அகத்தியனாரைச் சபித்தரென்ப சிலர். நீர் செய்த அகத்தியம் இறந்துபடுக, என்றுஞ் சபித்தனரென்ப, இவ்வரலாறு தொல்காப்பியத்துக்கு முதற்கண் உரை கண்டவராகிய இளம்பூரணர் கூறவில்லை.

அவருக்குக் கிடைக்காத செய்தி நச்சினார்க்கினியர்க்கு எப்படிக்கிடைத்தது என்று விளங்கவில்லை. தொல்காப்பியத்துக்கும் நச்சினார்க்கினியர் இளம்பூரணரோடு மாறுபட்டு உரை கூறும் இடங்கள் மிகப் பல அவற்றுள் ஒன்று கூறுகின்றேன்.

வேண்டிய கல்வியாண்டு மூன்றிறவாது என்னும் சூத்திரத்துக்கு கல்வி மேற்பிரிவுயாண்ட மூன்றே யாகுமென இளம் பூரணர் உரை கூறியிருப்பவும், நச்சினார்க்கினியர், வேண்டிய கல்வியாண்டு இறவாது: மூன்று இறவாது எனப் பிரித்துக்கல்விமேற் பிரிவு ஓரியாண்டாகுமெனவும், அக்கல்விதான் தத்துவமசி என மூன்றாகுமெனவும் வலிந்து பொருள் கொண்டார். அதனால் மேற்கண்ட கதை இளம்பூரண அடிகட்கும் நச்சினார்க்கினியார்க்கும் இடையே உண்டானதென்பது கொள்ளத்தக்கது. இளம்பூரண அடிகளுக்கு முன்னரே உண்டான கதையாயிருப்பின், அது அசம்பாவிதமென அவர் ஒதுக்கியிருத்தல் வேண்டும்.

இனி, இக்கதையை நாமே ஆராய்வோம். லோபா முத்திரையை விதாப்ய தேசத்தின் அரசன் மகளெனப் புராணங்கூறும். இங்கே புலத்தியர் உடன் பிறந்தாளாகிய லோபா முத்திரை என்று சொல்லப் படுகிறது. கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு என்றார். இதன் கருத்துத்தான் என்ன? கங்கை என்பது ஒரு பெண்ணென்பதும் அவளுடைய மகள் காவிரி என்பதும் காணக்கிடக் கின்றது. அவை தண்ணீரோடும் ஆறுகளாவது எங்ஙனம்?

இது ஒருபுறமிருக்க, அகத்தியனார் தொல்காப்பி யனாரை, நீ சென்று லோபா முத்திரையை அழைத்து வருக எனத்தொல்காப்பியனார், அவரை எவ்வாறு அழைத்து வருவது? என்று கேட்பானேன். அதற்கு அகத்தியனார், முன்னாகப் பின்னாக நாற்கோல் அளவில் நின்று அழைத்து வருக என்று சொன்னது எதற்கு? இதனால் இவரிடத்திலும் அகத்தியனார்க்கு ஐயப்பாடுண்டென்று புலப்படவில்லையா? அஙஙனம் ஐயப்பாடுடைய மாணக்காரை மனைவியை அழைத்து வரும்படி அனுப்புதல் ஏற்றதாமோ? நிற்க அவ்விரு வரும் வருங்காலத்து இடையே கங்கை, யமுனை, கிருஷ்ணை முதலிய பேராறுகள் இருப்பவும், அவற்றாலெல்லாம் இவர்களுக்கு ஓரிடையூருமின்றி வர வருஷத்தில் சில நாட்களே ஓடத்தகுந்த வையை யாற்றில்தானா அவ்விருவரில் ஒருத்திக்கு மாத்திரம் இடையூறு நேர வேண்டும் நாற்கோலளவிற் சென்ற தொல்காப்பியனார்க்கு இடையூறு வராமல் பின்னே சென்ற லோபா முத்திரைக்கு மட்டும் இடையூறு வந்ததெங்ஙனம்? ஒரு கோல் என்றால் வெகு நீளமான அளவுள்ளது என்னலாமோ யாதோ? அவர்கள் வந்து அகத்தியனாரிடம் தமக்கு வழியிலேற்பட்ட இடர்ப்பாடுகளையும் அதைத் தொல்காப்பியனார் விலக்கிய விதத்தையும் சொன்ன காலத்தில், அது கேட்ட அகத்தியனார் மிக்க மகிழ்ச்சி யடைவதை விட்டு, அவர்களைச் சபிப்பதற்கு அவர் என்ன அறிவும் ஆராய்ச்சியும் யில்லாதவரா?

### அகத்திய இலக்கண ஆராய்ச்சி

அகத்தியனார் இலக்கணம் செய்ததை யாராய்வோம். அகத்தியனார் அகத்தியம் என்னும் இலக்கண நூலைச் செய்தனர் என்பது பெருவழக்கு. ஒரு நாட்டிற்கு வேறு நாட்டார் வந்து அந்நாட்டின் மொழியைப் பயிலுங் காலத்து அவர் வந்து அந்நாட்டின் மொழியைப் பயிலுங்க காலத்து அவர் முதற்கண் செய்வது இலக்கண நூலாம். மொழியின் இயல்புகளை நன்கு உணர்வதற்கு இலக்கண நூலே

ஆதாரமானது. இக்காலத்து ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்து தமிழ் பயிலுங்காலத்து முதற்கண் இலக்கண நூலைச் செய்தனரென்பது ஆதாரமுடைய தேயாயினும், அது நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபட்டதென்பது உரையாசிரியர்கள் கூற்றால் நன்கு விளங்கும். ஆயினும் அவ்வப்போது வேறு சிலர் பற்பல சூத்திரங்களைச் செய்து கோத்தனர் என்பதற் கும் ஆதாரங்கள் உள. இறந்துபட்ட நூலில் யார் எனக் கூறினும் பொருத்த முடையதாகக் காணுமன்றே! இங்கே சில சூத்திரங்களை யாராய்வோம்.

*தரவே யருத்த மராகங் கொச்சக*
*மடக்கியல் வகையோ டைந்துறுப்புடைத்தே*
*கொச்சக வகையி னெண்ணொடு விராஅ*
*யடக்கியலின்றி யடங்கவும் பெறுமே*

இவையிரண்டும் அகத்தியம் என இளம்பூரணம் கூறுகின்றனர். மயிலைநாதர் உரையில்

*கன்னித் தென்கரைக் கட்பழந்தீவுஞ்*
*சிங்களங் கொல்லங் கூவிள மென்னு*
*மெல்லையின் புறத்தவு மீழம் பல்லவங்*
*கன்னடம் வடுகு கலிங்கந் தெலிங்கம்*
*கொங்கணந் துளுவக் குடகங் குன்ற*
*மென்பன குடபா லிருபுறச் சையத்*
*துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும்*
*முடியுடை மூவரு மிடுநில வாட்சி*
*யரசுமேம் பட்ட கிறு நிலக்குடிகள்*
*பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த*
*பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்*
*பலிவி னியைந்தவு மொன்றெனப் படுமே*
*அடிசில் பொத்தகஞ் சேனை யமைந்த*
*கதவ மாலை கம்பல மனைய*

இவை அகத்தியமெனக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இளம்பூரண அடிகள் காட்டிய சூத்திரங்கள் திட்ப நுட்பம் செறிந்து தமிழியல்புக் கேற்ப நன்கு அமர்ந்துள்ளன. மயிலைநாதர் காட்டிய சூத்திரங்களுள் தமிழியல்புக்கு ஒவ்வாத சூத்திரங்களும், ஐயப்பாட்டிற்கு இடமான சில செய்திகளும் காணப்படு கின்றன. முதன் சூத்திரத்தில் சையமென்ப தும், இரண்டாஞ் சூத்திரத்துள் பொத்த மென்பதும் வந்துள்ளன. சகரம் அகரத்தோடும், ஐகாரத்தோடும் ஒகாரத்தோடும் மொழிக்கு முதலில் வராதென்று தொல்காப்பியனார் கூறியிருப்பவும் இங்கே சையமென வருதல் எவ்வாறு பொருந்தும்? பொத்தகம் என்பது சங்க நூல் வழக்கன்று. ஆயினும் நாலடியாரில் பொத்தகம் என்னுஞ் சொல் வந்துளதேயெனின் அது தொகை நூலாகவின் பிற்காலப் பாட்டு அதில் சேர்ந்துள்ளதால் வேண்டும். கீழ்க்கணக்கில் ஒன்றாகி அகத்தியனார் காலத்தை நோக்கவே இது மிகப் பிற்பட்ட நூலாதல் காண்க.

அன்றியும் கன்னித் தென்கரைக்கட் பழத்தீவம் என்பதனால் கன்னியென்பது கன்னியாகுமரியெனப் பொருள்படும். அகத்தியனார் காலத்தில் தென் மதுரையில் முதற்சங்கம் நிறுவினதும் கபாடபுரத்தில் இரண்டாம் சங்கம் நிறுவினதும் அவையிரண்டும் கடல் கொள்ளப்பட்டதும் கூறப்படுதலால் அவர் காலத்தில் இக்குமரிக்கரை இருந்ததென்பது முற்றும் பொருந்தாது. நச்சினார்க்கினியரும் 49 நாடுகள் கடல் கொள்ளப்ட்டன என்கின்றனர். ஆகவே இன்னோ ரன்ன சூத்திரங்கள் இடைச்செருகல ாயிருத்தல் கூடும்.

இனி, சமீபகாலத்தில் 'பேரகத்தியத்திரட்டு' என ஒரு நூல் வெளிவந்துள்ளது. அவற்றிலுள்ள சூத்திரங்கள் அத்தனையும் பொய்க் கதைகளே. அதில் குணசந்தி, விருத்திசந்தி, தீர்க்க சந்தி ஆகிய இவற்றிற்கம் சூத்திரங்கள் உள. அன்றியும் சங்க காலம் முதலாக இன்று வரையேற்பட்ட தமிழ் காலவரை யறைகள் கூறப்பட்டுள்ளன. இச்சூத்திரங்களை களத்தூர் வேதகிரி முதலியார் என்பவர் போத்திய மெனப் பேரிட்டு சில அறைகுறையான சூத்திரங் களைப் பதிப்பித்திருந்தனர். அவற்றை யானே எனது நண்பர் பவானந்தம் பிள்ளையர்வகட்குத் தந்தேன். அவற்றோடு அவருக்குக் கிடைத்த வேறு சில சூத்திரங்களைச் சேர்த்து வெளியிட்டனர். அவர் தொல் காப்பிய முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்து அவற்றில் வரும் சூத்திரங்களைத் தொகுதி வெளியிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

இனி அகத்தியர்தம் மாணாக்கர் பன்னிருவர் எவர் என்பதை ஆராய்வோம்.

**தொடரும்**


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**

# கீழடி

## தமிழர் தொன்மையின் அடையாளம்





**‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என கணியன் பூங்குன்றனார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடியுள்ளார். அப்போதே தமிழன் உலகளாவிய சிந்தனையுடன் விளங்கியுள்ளான் என்பதை இந்த வரிகள் காட்டுகின்றன.**

வாளோடு முன்தோன்றிய மூத்த குடி“ என்கிறது புறப்பொருள் வெண்பா மாலை. நம் முன்னோர்கள் தமிழ்மொழியையும், தமிழனையும் பெருமைப்படுத்தி பாடிய பாடல் வரிகளுக்கெல்லாம் அறிவியல் ஆதாரங்கள் கேட்டு நகைத்த நிகழ்வுகள் உண்டு. இதற்கெல்லாம் ஆதாரமாக அள்ள அள்ள கொடுக்கும் அமுதசுரபியாய் கீழடியில் அகழாய்வு மூலம் பொருட்கள் கிடைத்து வருகின்றன.

வைகை நதி நாகரிகமானது சிந்து சமவெளி, மொகஞ்சதாரோ, ஹரப்பாவை பின்னுக்குத் தள்ளக்கூடியது என்று கீழடி அகழாய்வு முடிவுகள் அறைகூவல் விடுத்துள்ளன.

ஓடுகளால் வேயப்பட்ட வீடுகள், சமையல் செய்து உணவருந்தியதற்கான ஆதாரங்களாக அடுப்பு, மண்பாண்டங்கள், உறை கிணறுகள், வரி வடிவ எழுத்துகள் என நாகரிகத்துடன் அக்கால தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். இவற்றின் காலம் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என தமிழக அரசு அறிவித்துள்ளது. அப்போதைய வாழ்க்கை முறையில் பெரும்பாலானவற்றை இன்றும் நாம் பின்பற்றி வருகிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை.

கீழடியில் 5 கட்ட அகழாய்வில் ஆயிரக்கணக்கான பொருட்கள் கிடைத்துள்ளன. அதில் 4 மற்றும் 5வது கட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்கள் மதுரையில் உள்ள உலகத்தமிழ் சங்கத்தில் கண்காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. 2 அரங்கங்களில் கீழடியில் கிடைத்த பொருட்களும், 3வது அரங்கத்தில் ‘3டி தொழில்நுட்பம்’ மூலம் பொருட்களை காணும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் காலை 11 மணி முதல் இரவு 7 மணி வரை இந்தக் கண் காட்சியை இலவசமாக காணலாம்.

தினமும் ஏராளமான மக்கள் இந்தக் கண் காட்சியை கண்டு, தமிழர்களின் பெருமையை அறிந்து வருகிறார்கள்.

**தந்தம் தந்த பகடைக்காய்**

கண்காட்சியில் பகடைக்காய் ஒன்று வைக்கப் பட்டுள்ளது. இந்த பகடைக்காயும் விளையாட்டுச் சாதனமாக இருந்திருக்கலாம். இரும்பு, செம்பு, பித்தளை, மரக்கட்டைகளில் பகடைக்காய் பார்த் திருப்போம். ஆனால், கீழடி கண்காட்சியில் வைக்கப் பட்டுள்ள பகடைக்காய் வித்தியாசமானது. யானை தந்தத்தால் செய்யப்பட்டது எனவே, இந்த பகடைக் காயை அக்காலத்து செல்வந்தவர்கள் விளையாடு வதற்கு பயன்படுத்தியதாக தொல்லியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தின் பல இடங்களில் நடைபெற்ற அகழாய்வுப் பணிகளில் இதுபோன்ற தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக்காய் வேறு எங்கும் கிடைக்கவில்லை எனவும், இதுவே முதல்முறை எனவும் அவர்கள் கூறுகிறார்கள். இந்த பகடைக்காய் மூலம் இன்னொன்றையும் நாம் அறிய முடியும். அதாவது, சுமார் 2600 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திலேயே கீழடி மக்கள் யானை தந்தத்தில் இருந்து பல வகையான அரிய பொருட்களை செதுக்கி உருவாக்கும் தொழில்நுட்பத்தை அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு சான்றுதான் அந்த பகடைக்காய்.

**சதுரங்கத்தின் தாய் விளையாட்டா?**

கீழடி அகழாய்வில் பண்டைய தமிழர்கள் விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்ததை நிருபிக்கும் வகையில் பல வகையான பொருட்கள் கிடைத்துள்ளன. பல்வேறு வடிவங்களில் பல்வேறு குறியீடுகள் பொறிக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட ஆட்டக்காய்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. ஆட்டக்காய்களை வைத்து விளையாடும் சதுரங்க விளையாட்டையோ அல்லது அதுபோன்ற வேறு ஒரு விளையாட்டையோ நம் முன்னோர் இந்தக் காய்களைக் கொண்டு விளையாடி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒருவேளை சதுரங்கத்தின் தாய் விளையாட்டாகக் கூட அது அமைந்து இருக்கலாம். கண்காட்சியில் அந்தக் காய்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு குறிப்பும் எழுதப்பட்டுள்ளது. அதில், கருப்பு, வெள்ளை கட்டங்கள் வரைந்த அட்டைகளை கொண்டு இருவர் மட்டும் எதிர் எதிரே அமர்ந்து ஆடும் ஆட்டம். ஒவ்வொரு ஆட்டக்காரரும் 16 காய்கள் வைத்து விளையாடுவர். ஒருவர் எத்தனை காய்களை வீழ்த்துகிறாரோ அவர் ஆட்டத்தில் வெற்றி பெற்றதாகவும், காய்களை இழந்தவர் தோல்வி அடைந்ததாகவும் கருதப்படுவார் என எழுதப்பட் டுள்ளது.

**முப்பரிமாண காட்சி**

கீழடியில் கிடைத்த பொருட்களில் 30 பொருட்களை வைத்து 3டி (முப்பரிமாணம்) தொழில் நுட்பத்தின் மூலம் அவற்றை பார்வையாளர்கள் தொட்டு பார்க்கும் வகையில் வசதி செய்யப்பட் டுள்ளது. இதற்காக 'விர்ச்சுவல் ரியாலிட்டி எக்ஸ் பீரியன்ஸ்' என்ற அரங்கம் கண்காட்சியில் அமைக்கப் பட்டுள்ளது. இதன் சிறப்பு என்னவென்றால் 3டி தொழில்நுட்பம் மூலம் மண்பாண்டம் உள்ளிட்ட பொருட்களை 3டி மூலம் ஸ்கேன் செய்து, காட்சியாக பதிவேற்றி உள்ளனர். பார்வையாளர்கள், தங்களது பிரத்தியேகமான கண்ணாடியை (விர்ச்சுவல் கிளாஸ்) மாட்டிக்கொண்டு 3டி தொழில்நுட்பம் மூலம் அந்த பொருட்களை தொட்டுப் பார்க்கலாம்.

அதேபோல 'புளோர் புரொஜெக்ஷன்' என்ற தொழில்நுட்பத்தின் மூலம் தரையில் அனிமேஷன் வீடியோவும் ஓடுகிறது. அதில் குளத்தில் மீன்கள் சுற்றித்திரிவது, கால் வைத்தால் பூக்கள் மலருவது போன்று புதுமைகள் இடம்பெற்றுள்ளன. இதுவும் கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்களைக் கவருகிறது.

**உருவங்கள் பல...**

சுடுமண் உருவங்கள் பல கீழடியில் கண்டெடுக் கப்பட்டுள்ளன. காளையின் தலை, குதிரைத் தலை, மனிதத் தலை, குழந்தையின் உருவம் ஆகியவை இதில் அடங்கும். கிரீடம் அணிந்தது போன்ற தலை ஒன்றும் கிடைத்திருக்கிறது. கண்காட்சியில் இடம் பெற்றுள்ள இந்தத் தலையானது, அப்போது ஆட்சி செய்தவரின் உருவத்தை வைத்து செய்யப்பட்டதா? அல்லது வழிபாட்டு உருவமா? என்ற கேள்வி தொல்லியல் அறிஞர்கள் உள்பட அனைவரின் மனதிலும் எழுந் துள்ளது. இதுதொடர்பாக ஆய்வு நடந்து வருவதாக தொல்லியல் அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள்.

கீழடி அகழாய்வில் தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் சேகரிக்கப்பட் டுள்ளன. இவற்றில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற பெயர்களும், முழுமைபெறாத சில எழுத்து களுடன் கூடிய உடைந்த பானை ஓடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் வரும் 'ஆதன்' என்ற பெயர் 'அதன்' என்று குறிப்பிட்டுள்ளது. கீழடி தமிழ் பிராமி எழுத்துகள், இப்போதைய எழுத்து வடிவங்களுக்கு முந்தியவை என்று வரலாற்று வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். அந்த பிராமி எழுத்துகளுடன் கூடிய பானை ஓடுகளை கண்காட்சியில் நாம் பார்க் கலாம்.

கீழடியில் கிடைத்த கருப்பு சிவப்பு நிறப்பானை ஓடுகள் சிலவற்றின் மாதிரிகள் நிறமாலையியல் பகுப்பாய்வு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அந்த ஆய்வு முடிவுகளின்படி சிவப்பு நிறத்திற்கு இரும்பின் தாதுப்பொருளான ஹேமடைட் என்பதையும், கருப்பு நிறத்திற்கு கரிமப் பொருளான கரியையும் பயன்படுத்தி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. கீழடியில் கிடைத்த மண்பாண்டங்களில் சில பொருட்களில்

சின்ன சின்ன துளைகள் இருந்தன. குறிப்பாக, மண் பானையை மூடுவதற்கான மூடி முழுவதிலும் அது போன்ற துளைகள் காணப்பட்டன. அதாவது, உணவு சமைக்க வசதியாக இந்த துளைகள் போடப்பட்டு இருக்கலாம். இப்போதும் சமையல் பாத்திரங்களிலும், கரண்டி போன்றவற்றில் சின்ன சின்ன துவாரங்கள் இருப்பதைப் பார்க்க முடிகிறது. அக்காலத்திலேயே தமிழர்கள் இந்த வித்தையை செய்து காட்டி இருக் கிறார்கள். கீழடி அகழாய்வில் கண்ட றியப்பட்ட செங் கற்கள், சுண்ணாம்புச்சாந்து, கூரை ஓடுகள், சுடு மண்ணால் ஆன உறைகிணறுகள் அக் காலத்தைய தமிழர்களின் நாகரிக வாழ்வையே வெளிப் படுத்து கின்றன. இவை ஒவ்வொன்றிலும் சிலிக்கா மண், சுண் ணாம்பு, இரும்பு, அலுமினியம், மெக்னீசியம் போன்ற கனிமங்கள் காணக்கிடைக்கின்றன என சோதனை முடிவுகள் கூறியுள்ளன. கீழடியில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை மேற்கொண்ட இரண்டு கட்ட அகழாய்வுகளில் வெளிப்பட்ட கட்டுமானங் களில் 13 மீட்டர் நீள சுவர் ஒன்றும் அடங்கும். மேலும் செங்கல் ஓடுகளால் ஆன மேற்கூரையும், சரிந்த நிலையில் வெளிப்பட்டது. அந்த மேற்கூரையை தரையுடன் இணைக்க மரத்தூண் உள்ளிட்டவற்றை யும் பயன்படுத்தி உள்ளனர். மேலும், கூரை ஓடுகளின் தலைப்பகுதியில் காணப்படும் துளைகள் மூலம் அவை சரியாமல் இருக்க கயிறு அல்லது நார் கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. கூரை ஓடுகளின் மீது விழும் மழை நீர் எளிதாக கீழே வரும் வகையில் சிறிய ஓடை போன்ற அமைப்பையும் உருவாக்கி உள்ளனர். அதன் மாதிரியையும் கண்காட்சி யில் பார்த்து ரசிக்கலாம்.

கீழடி அகழாய்வில் கிடைத்த சூது பவளம் (கார்னீ லியம்) முக்கியமானது. இவை ரோம் நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கீழடியிலேயே தயாரிக்கப்பட்டு இருக்கலாம் என கூறுகிறார்கள். ரோம் நாட்டு அரிட்டைன் பானை ஓடுகளும் கிடைக் கப் பெற்றுள்ளன. இதுபோன்ற பானைகள் கி.மு. 2ம் நூற்றாண்டில் ரோம் நாட்டில் புழக்கத்தில் இருந்தவை என்கின்றனர். எனவே ரோம் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் கீழடிக்கு வந்திருக்கலாம் என்று தெரிகிறது. அக்காலத்திலேயே தமிழர்கள் வெளிநாட்டு வணிகத்திலும் சிறந்து விளங்கி இருக்கலாம் என்பதற்கு சான்றாக உள்ளது.

### ‘ஸ்மார்ட் கிச்சன்’

உணவு பரிமாறும் மேசையில் தட்டுகள், கரண்டி, கோப்பைகள், டம்ளர்கள் என சில பொருட்கள் இருக்கும். அதாவது, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகை பொருள் என வகைப்படுத்தி மேசையில் வைத்தி ருப்போம். நாகரிக உலகம் என்று கூறப்படும் இந்தக் காலத்தில் இந்த பொருட்களில் எத்தனையோ புதிய மாடல்கள் வந்துவிட்டன. ஆனால், 2600 ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த பண்டைய தமிழர்களும் இதே நாகரிகத்தோடு தங்கள் சமையல் அறையையும், உணவு பரிமாறும் இடத்தையும் அழகுற வைத்திருந்தார்கள் என்றால் யாருக்குத்தான் ஆச்சரியம் வராது. அதற்குச் சான்றாகத்தான் கீழ்க்கண்ட கீழடிப் பொருட்கள் இருக்கின்றன. அந்தப் பொருட்கள் அனைத்தையும் சுடுமண்ணால் செய்து பயன்படுத்தி இருக்கிறார்கள். அளவுக்கு தகுந்தபடி விதவிதமான பானைகள், கருப்பு சிவப்பு குவளைகள், தண்ணீர் ஊற்றப் பயன்படும் மூக்குப்பகுதியைக் கொண்ட பானை, மூடிகள், விறகு அடுப்பில் சமைத்து முடித்து, இறக்கி வைக்கும் போது தரை கரியாகிவிடாமல் இருக்க அந்த பானைகளைத் தாங்கும் தாங்கிகள் என ஏறக்குறைய 300க்கும் மேற்பட்ட பொருட்கள் அகழ்வாய்வில் கிடைத் துள்ளன.

‘ஸ்மார்ட் கிச்சன்’ என்று இப்போது கூறப்படும் நவீன சமையல் அறையை அக்காலத்திலேயே தமிழர்கள் வடிவமைத்து இருக்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது. இதில் மூக்குப்பகுதியை வைத்து செய்யப்பட்ட சுடுமண் கெண்டி, கண் காட்சியில் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந் துள்ளது என்பது கூடுதல் தகவல்.

### அது என்ன தக்களி?

தக்களி என்பது நூல் நூற்கப் பயன்படும் ஒரு சிறு கருவி. 200க்கும் மேற்பட்ட தக்களி என்ற கருவிகள் கீழடியில் நடந்த அகழாய்வில் கிடைத்துள்ளன. இந்த தக்களிகள் களிமண், மணல்கள், சோப்புக்கல் ஆகிய வற்றால் செய்யப்பட்டுள்ளன. இதில் துளை யிட்டு அதில் ஒரு கம்பி அல்லது குச்சியைச் சொருகி நூல் நூற்கலாம். இதன் மூலம் பண்டைய தமிழர்கள் நெசவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக் கிறார்கள் என்பதும், ஆடைகளை அவர்களே தயார் செய்து இருக்கிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. தமிழகத்தில் பல இடங்களில் நடைபெற்ற அகழாய்வுப் பணிகளில் இதுபோன்ற தக்களிகள் ஏராளமான கிடைத்துள்ளதாகவும், மற்ற இடங்களில் கிடைத்ததை விட கீழடியில் அதிக எண்ணிக்கை கொண்ட தக்களிகள் கிடைத்ததாக தொல்லியல் வல்லுனர்கள் விளக்கம் அளித்தனர்.

### சில்லுகளும்...விளையாட்டும்...

பண்டைய தமிழர்கள் விளையாடப் பயன்படுத்திய பொருட்களில் சுடுமண்ணால் செய்யப்பட்ட வட்ட சில்லுகளும் ஒன்று. கீழடியில் நடைபெற்ற அகழாய்வில் 100க்கும் மேற்பட்ட வட்ட சில்லுகள் கிடைத்துள்ளன. இவை சிவப்பு, கருப்பு, மஞ்சள், இளஞ்சிவப்பு உள்ளிட்ட பல நிறங்களில் கிடைத்துள்ளன. ஏழை எளிய மக்கள் இதுபோன்ற வட்ட சில்லுகளைப் பயன்படுத்தி சில விளையாட்டுகளை விளையாடி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதுபோல், சுடுமண் சக்கரங்களும் கிடைத்துள்ளன. அந்தச் சக்கரங்களைப் பயன்படுத்தி மண்ணால் வண்டி செய்து அவற்றின் மூலம் விளையாடி இருக்கலாம் எனத் தெரிகிறது. ●

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை



மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் வழக்குரைஞ ராக இருந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி:

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (உ.வே. சாமிநாதய்யரின் குருகுல ஆசிரியர்) தமிழ் நாட்டுச் சைவ மடங்களான ஆதினங்களுடன் நெருங்கிய தொடர்பு டையவர். திருவாவடுதுறை ஆதினத்தின் மீது ஒரு வழக்கு வந்தது. அதை எதிர் கொள்ள ஆதீனத்தார் ஒரு வழக்கறிஞரை நியமிக்க மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை நாடி னார். அவரும், அவர் வாழ்ந்த பகுதியில் வாழ்ந்து கொண்டி ருந்த கிறித்தவரான வேதநாயகம் பிள்ளை யிடம் அவர்களை அழைத்துச் சென்றார்.

வேதநாயகம் பிள்ளை அவர்களின் வீட்டிற்குள் ஆதீனத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்தவர்கள் பேசிக் கொண்டிருப்பதை அறிந்த மகாவித்துவான், வெளியில் இருந்தே ஒரு சிறு கவிதை எழுதி அனுப்பினார். ஆதீனத்திற் காகத் தாங்கள் வாதாடி வெற்றி பெறச் செய்தால் நன்றி உடையவனாகவும், தங்களின் புகழ் பாடுபவனாகவும் இருப்பேன் என்பது அக்கவிதையின் சாரம்.

வேதநாயகம் பிள்ளை, எதிர் மனுதாரர்களை அனுப்பி விட்டு, ஆதினத்தினரை அழைத்துப் பேசி, அவர்களுக்காக வாதாடி வெற்றியும் கிடைக்கச் செய் தார். மகாவித்தவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தாம் கூறியவாறே மாயூரம் வேதநாயகம் பிள்ளை மீது 400 பாடல்கள் கொண்ட குளத்தூர்க் கோவை என்னும் கோவை இலக்கியத்தைப் பாடினார்.

பின்னாட்களில், மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் மகாவித்தவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மீது பாடல்கள் பாடியுள்ளார்.

## கவனிக்கப்பட வேண்டிய தாய்த் தமிமிழின் சொந்த மகள்

*முனைவர் மலையமான்.*

*இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பலுச்சிஸ் தான் என்ற நிலப்பிரிவு இருக்கிறது. இங்கு பலுச்சி மொழி வழக்கில் உள்ளது. இதனுடன் பிராகுவி மொழியும் அங்கு வாழ்கிறது. இந்த மொழி பழைமை யான மொழி. இம்மொழி பற்றி லேசென் என்பவர் ஆய்வு செய்தார்.*

*இது தமிழ் மொழியுடன் உறவு உடையது என்று கண்டறிந்தார். இவருடைய கருது கோளை டிரம்ப் என்பவரும் உறுதி செய்தார். டெனிஸ் பிரே என்ற ஆய்வாளரும் முன்பு ஆய்வு நிகழ்த்தினார். இவர், பிராகுவி மொழியும் அதன் இலக்கணமும் என்னும் தலைப்பில் நூல் படைத்தார்.*

*இந்த மொழியில் காலப்போக்கில் பெர்சிய மொழி கலந்தது. பின்பு இந்தி மொழியும் அதில் ஏறியது. பலுச்சி மொழிச் சொற்களும் இணைந்தன. பல்வேறு மொழிக்கலப்புகள் ஏற்றுக் கொண்ட பிறகும் நெடுங் காலத்தைத் தாண்டிய பிறகும், பிராகுவி மொழியில் தமிழ்ச் சொற்கள் நேர்முக நிலையிலும் திரிபுற்ற நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இது வியப்புக்குரியது. யான், யாம், கண், கல் ஆகிய சொற்கள் அப்படியே அம்மொழியில் உள்ளன.*

*ஆய்வறிஞர் அரசேந்திரன் 'கல்' என்னும் சொல் உலகம் முழுவதும் பரவியது என்று அறிவித்தார். இது இங்கு நினைக்கத்தக்கது.*

*பிராகுவி மொழியில் பல தமிழ்ச் சொற்கள் திரிபுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. எடுத்துக்காட்டு காஃப் (காது), பா (வாய்) ஆ (யா எனும் வினாச் சொல்) முரு (முயல்) ஆம் (யாம்) மண் (முன்) ஹெனன் (இனிய) முட்கின் (முதுமை) தட் (தகு) ஆன் (நான்). 'கள்' என்ற பன்மை விகுதி தமிழுக்கு உரியது. 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு, 'கான்' என்று மாறியுள்ளது. பல இலக்கண ஒற்றுமைக் கூறுகளும் அம்மொழியில் அமைந்துள்ளன. செந்தமிழின் சொந்த மகளான பிராகுவி மொழியைப் பற்றி முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.*

***சைதை மணிமாறன்.***

Latin alphabet for Brahui with Arabic equivalents

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| b | á | p | í | s | y | ş | v | x | e | z | ź |
| ب | آ | پ | ای | س | ی | ش | و | خ | ے | ز | ژ |
| bá | á | pá | í | sá | yá | ṣá | vá | xo | e | ze | źí |
| [b] | [aː] | [p] | [iː] | [s] | [j] | [ʃ] | [v] | [x] | [eː] | [z] | [ʒ] |
| ġ | f | ú | m | n | l | g | c | t | ŧ | r | ŕ |
| غ | ف | آو | م | ن | ل | گ | چ | ت | ٹ | ر | ڑ |

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

சங்கத்தமிழில் “கடவுள்“ உண்டா? எனில் யார்? சங்கத்தமிழில், “இறை“ என்பது இயற்கை வழிபாடே! புராண புருடாணங்கள் ஒன்றுமில்லை!

இயற்கைக்கு மாறான இறைக்கொள்கை முதல் இடைச்சங்கத் தமிழில் இல்லவே இல்லை! என்ன ஆதாரம்? என்ன துரவு? “கடவுளும் இலவே“ என்ற சங்கப் பாடல் மாங்குக் கிழார் பாடியது!

“விநாயகர் சங்கத் தமிழில் இல்லை“ ன்னு முன்பு வெறுமனே பதிவு தான் இட்டேன். அதுக்கே,,, டிவிட்டர் இல் சில பெரியவா, தய்யாதக்கான்னு குதிச் சாங்களாம். Okies; I am Very Sorry! But என்ன தான் குதிச்சாலும், விநாயகரைச் சங்கத் தமிழில் கண்டு பிடிக்க முடிஞ்சுதா? இல்லை தானே? அதான் உண்மை. Matter is Very Simple! இன்றைய நிலை வேறு, தொன்மம் வேறு!

இன்று இன்றாக இருக்கட்டும்: தொன்மம் தொன்மமாக இருக்கட்டும்! இந்தப புரிதலே போதும்! உங்களுக்கு இன்னிக்கி புடிச்சிருக்கு என்பதற்காக தொன்மத்தை மாத்தி எழுதீற முடியாது. உங்க தனிப்பட்ட விநாயக வழிபாட்டை இழிவு செஞ்சா, அது தப்பு.

ஆனா, சங்கத் தமிழில் விநாயகர் இல்லை ன்னு எழுதினா? தப்பு அல்ல: அது தொன்மவியல்!

தமிழ் நிலத்தின் இறைத்தொன்மம் நடுகல்“! தமிழ் முன்னோர் தலைவர்கள் தங்கள் ஆதிகுடிகளைக் காத்த நினைவாக கல் சமைத்துப்போற்றுவது நடுகல் நீத்தார் பெருமை! அதுவே இறைமை! “கந்து” என்பதும் உண்டு கல் தூண்! கந்து / நடுகல்லில் குடி காத்தவர் களின் பெயர் / படம் எழுதி வைப்பதும் உண்டு!

முல்லையின் மாயோன் (திருமால்) குறிஞ்சியின் சேயோன் (முருகன்) இப்படித்தோன்றியவர்கள் தான்! ஆதி குடிகளின் இனத்தலைமை! கந்தன் இவன்



2

# சங்கத்தமிழில் இறை

ஸ்கந்தன் அல்ல! திருமால் இவன் விஷ்ணு அல்ல!

இவர்கள் ஆதி குடி நாட்டார் தெய்வங்கள். பின்னாளில் சமஸ்கிருதம் கலந்து, புராணக் கதைகள் ஏற்றப்பட்டு பெரும் தெய்வங்களாய் மாறிப்போனது அப்புறம் தான்.

சைவம், வைணவம் என்ற பேரே சங்கத் தமிழில் கிடையாது. மத அமைப்பு" இல்லவேயில்லை. முல்லை காட்டின் அடர் கருமை மாயோன் குறிஞ்சி மலை உச்சியின் சிவப்பு சேயோன், மால் தங்கள் கண்ணுக்குப் பச்சைப்பசேல் எனக்காட்சி வழங்கிய காட்டின் இயற்கை அழகை, மால் என்று ஆதித்தமிழர்கள் வழுத்தினர். திரு.வி.க. ஆய்வுரை!

மாயோன் வழிபாடு தமிழ்நாட்டின் பூர்வீக வழிபாடுகளில் ஒன்றாகும், மாயோன் என்பது கருமை நிறமுடையவன். திருமால் எனப்பொருள்படும்" ஈழத்து அறிஞர்கள் கா. சிவத்தம்பி!

முருகு பெண்கள் மேல் இறங்கும் ஒரு "ஆவி த் தெய்வம் என்பதே சங்க மரபு! "வேலன் வெறியாடல்" என்கிற நாட்டார் பூசை. வெறியாடிகளின் மேல் முருகு இறங்கல், ஆட்டுப்பலி, சூர்மடிதல் ன்னு பழங்குடி வழக்கம்.

கந்து யானையைக் கட்டி வைக்கும் குறுந் தூண்: அதையும் அந்த யானையே தான் சுமந்து செல்லும்! தன்னைக் கட்டும் ஒன்றையும் தானே சுமந்து செல்லுதல் போல் கட்டுப்படாக் கடவுளும், அன்பால் தானே கட்டுப்படல். அதுவே கந்து அன் கந்தன்!

வள்ளி கந்து (எ) கல்தூணில் படரும் வள்ளிக் கொடி! இது முன்னோர்களின் காதல் வாழ்வுக்கு அடையாளம். மறைந்துவிட்ட தலைவன் தலைவி நடுகல்லும், அதில் படரும் கொடியுமாய்! கொடிநிலை, கந்தழி, வள்ளி (தொல்காப்பியம்)

நினைவு போற்றுதல்! அன்பே தெய்வம்! இயற்கை வாழ்வு! புராணங்கள் இல்லை. நடுகல்லு வச்ச இடத்தில் ஒரு காதல் காட்சி! அவளுக்கு அவன்மேல் "மிக்க" அன்பு! அவனோ அவளைக் கண்டும் காணாதது போல் இருக்கான். தன் காதலை வாழ்விக்க முடியாம, அவ என்ன பண்ணுறா? தற்கொலை? இல்லையில்லை!


சூர் நசைத்தலையாய் நடுகல்" கண்டே பரிந்தனென் அல்லனோ, இறை இறையானே முன்னோர்களே, நீங்க தூக்கி வளர்த்த இவனுக்கு நீங்களே என் அன்பையும் புரிய வைக்கக்கூடாதா? என்று நடுகல்லையே அவ வணங்குறா!

தன் முன்னோர் மரபின் மேல், அவகொண்ட மதிப்பு! அந்த மதிப்பால், அவன் மதிப்பில் அவ உசந்துட்டா. அவன் அவளைப் புரிஞ்சிக்கிட்டான்: இதழ் இழுத்து உறிஞ்சிக்கிட்டான். இதுவே மாமூலனாரின் குறுந்தொகைப்பாடல்!

இந்த நடுகல், பார்ப்பதற்கு இன்றைய லிங்கம் போல் இருந்தமையால், சில ஆய்வாளர்கள் லிங்கம் என்று பிழையாக எண்ணி விட்டார்கள். ஆனால், அன்றைய தமிழில் "ல" ன்னே எழுத்து தொடங்காது. லக்ஷ்மி இலக்குமி லிங்கம் இலிங்கம்! லிங்கம் வடமொழி. தமிழில் எழுதும் போது இலிங்கம்!

அப்புறம் எப்படி நடுகல் லிங்கம் ஆகும்? தொன்மவியல் ஆய்விலும் ஆய்வாளரின் சைவப்பற்று: மதம் ஆன பேய் வந்து ஊடாடினால்? இதான் கதி

தொல்காப்பியர் காட்டும் நடுகல் சீர்த்தகு மரபு காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் தொல்,. புறத்திணை. இந்த மரபு தான் தமிழ் மரபு என்று ஓங்கி வளர்ந்தது!



முன்னை மரபின் முதுமொழி முதல்வ  திருமால். அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக  முருகன்.

**கலப்பின் காலம்**

வணிகம்  தொடர்பு காரணமாய், வடமொழி (எ) வடநெறி தமிழ் நிலத்தின் ஓரமா வந்து குந்திக்கிட்டு இருக்கு! இது தொல்காப்பியருக்கும் தெரியும்! அதான் வட எழுத்து ஒரீ இ“ (ஒதுக்கு) ன்னு எழுதினாரு! பண்பாடுகள் சற்று கலக்கத்தான் செய்யும்! யாரும் தனித்து வாழவியலாது: ஆனால், அப்படிக் கலக்கும் போது “ஒரு சமூகம், தன் வேர்களை இழந்து விடக்கூடாது“ மரியாதையுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்: அதுவே நல்லது!

தமிழில் 5 % பிற மொழிச் சொல் ஓகே... ஆனால் 35சதவீதம் சமஸ்கிருதச் சொல் புகுத்தினால்? பேரசைட் போல் ஒட்டி ஒட்டியே உறிஞ்சி இழுத்து விடும்! சொல்/பொருள் என்ற சொற்களே நாளடைவில் மறைஞ்சிப்போய் வார்த்தை / அர்த்தம் ன்னே பழக்கம் ஆயீரும்!

ஆங்கிலமாச்சும் பரவாயில்லை, பிகர் ன்னு எழுதினா, உங்க பாட்டி கூட பிகர் என்பது இங்கிலீஷ்ன்னு சொல்லீருவாங்க..

ஆனா சமஸ்கிருதச் சொற்கள்: வார்த்தை/ அர்த்தம்? அதுவும் தமிழ் தானோ? எ. நம்மையே நம்ப வைத்துவிடும் தலைமுறைத் தீமை பேரசைட் தீமை!

நம்மிடம் இல்லாத சொற்களை, பிறமொழிகளில் இருந்து பெற்றுக்கொளல் தவறில்லை. ஆனால் இருக்கும் சொல்லை/சொத்தை அழித்து, கடன் வாங்குதல் அறிவீனம் அல்லவா?

தொல்காப்பியர், வடசொற்களும் தமிழில் புழங்க ப்ளக்சிபிலிட்டி, என நெகிழ்வு குடுத்தாரு, எடுத்துக் காட்டு, கமலம்  தற்சமம் (அப்படியே எழுதுவது) பங்கயம்  தற்பவம் (பங்கஜம் தமிழ் விதிகளுக்கு உட் பட்டு, பங்கயம் என்று மாற்றி எழுதுவது)

இந்த பிளக்ஸ்பிலிட்டி பெயர்ச் சொற்களுக்குச் சரிவரும்! ஆனா இதையே எல்லாத்துக்குமே நுழைக்கப் பார்த்தால்?

அரசர்கள்: அதிகாரம் மூலமா நுழைந்து கொண்டது வடநெறி மதம் என்கிற சக்தி வாய்ந்த போர்வை போர்த்தி வந்திருக்கே? Emotional Attack!

உன் பித்ரு  முன்னோர்கள், மேல், லோகத்தில் வைரவதி என்னும் நெருப்பு ஆற்றிலே, பசி பசி என்று அலறுவார்கள்: ஆகவே தர்ப்பணம் கொடு“ இப்படில லாம் சொன்னா, எதுக்கு வம்பு, உண்மையோ/ பொய்யோ, கொடுத்துத்தொலைச்சிருவோம் என்று செய்வீர்கள் தானே?

பண்டைத் தமிழ் மன்னர்களின் மன உணர்ச்சி பாவம். பாவத்தை ஈடு கட்டணுமா? புண்யம், ஸ்வர்க்கம், நரகம், ஹோமம், யாகம்  இந்த வித்து (மாயை) தூவப் பட்டு விட்டது!

முது குடிப்பெருவழுதி பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆனான்! பெருநற்கிள்ளி  இராஜசூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளின்னு மாறிட்டான்!

அரச / அதிகாரப் பரவலே முதலில். பின்பே இலக்கிய சமூகப் பரவல்! ஆம்! அது கடைச்சங்க காலம்! கடைச்சங்க காலம்  மதமில்லாத் தமிழ்ச் சமூகத்துக்கு , “மதம்“ பிடித்தது. ஜாதியும் பிடித்தது.

முல்லை  குறிஞ்சி என்ற ஆதிகுடி காட்டு வாழ்க்கை! புலம் பெயர்ந்து..மருதம் என்ற வயல்வெளி / ஆற்றோர நாகரிகம் கண்ட மக்கள். நாகரிகம் செழிக்கச் செழிக்க, “அந்நிய நெறிகள்“ நுழைந்து, தமிழ் நிலத்தை மாற்றிப்போட்டது!

பண்பாட்டுக்கலப்புக்குப் பின்: அரசனைக் கொண்டது போல், ஒட்டுமொத்த சமூகத்தையும் எப்படிக்கொள்வது?

வாழ்க்கையின் துன்பமெல்லாம் விலகி ஓடணுமா? பூஜா புனஸ்கார ஜோதிட பரிகாரம், ஜோதிட் மயக்கம், நம் அப்பாவி மக்களுக்குப் பெரும் மயக்கம் அல்லவா?

(கண்ணகி கிட்டவும் பரிகாரம் செய்யச் சொல்றாங்க, இழந்த புருசனை அடைய ஆனா அவள் செய்ய மறுக்குறா)

தமிழ் மக்களே...உங்க முருகனும், திருமாலும், இங்கேயும் இருக்கா பாருங்கோ! எங்க சமஸ்கிருதத் திலும் இருக்கா பாருங்கோ! வெறுமனே நடுகல்லா இல்லாம....மேஜிக் ஜாலி யான புராணக்கதைகள்..

தங்கள் வேதக்கடவுள்களான சோமன், அக்னி, இந்திரன், அஸ்வின், மித்ரன், இவர்களையெல்லாம் சற்றே தள்ளிவைத்து, தமிழ்க் கடவுள்களையே புதிய புராணக் கடவுள்களாக உருவாக்கம்!

லோக்கல் பாணியில் பேசிப் பேசியே, லோக்கள் மக்களைக் கவரும் அன்றைய பிராமண சுவிசேஷம்..

கந்தன் : ஸ்கந்தன் ஆனான்! திருமால்  விஷ்ணு ஆனான்! தமிழ்த்தொன்மங்களின் மேலேயே, பலதும் ஏற்றப்பட்டன. நம் தொன்மங்களை, நாமே இழக்க வைக்கும் “உத்தி“  புராணம் ஏற்றுதல்! இது எப்படிச் சாத்தியம் ஆயிற்று?

பிரபலம் கொழிக்கத் துவங்கியவுடன்  அர்ச்சகாள் வந்துட்டா! ஆத்தாள்  அம்பாள் ஆகி தல புராணமும் இப்போ வந்துருச்சு அல்லவா? அதே உத்தி! நமக்கும்

ஆத்தாளை விட அம்பாள் என்று சொல்வதே ப்ரமோஷன் அடைந்த திருப்தி.

சிறு தெய்வம் நம் தாழ்வு மனப்பான்மை! அதையே மந்திரம் சொல்லிக்கொண்டாடினால்? பெருந்தெய்வம் உயர்வு மனப்பான்மை!

உங்க நடுகல் முருகனும் / திருமாலும், சேன்ஸ் கிருட்லயும் இருக்கா பாருங்கோ! முருகன் அங்க சுப்ரமணியன் கம்மி. திருமால் விஷ்ணு சற்று அதிகம். விஷ்ணு வை அங்கே அதிகம் பரவிட்டாங்க, மும்மூர்த்தி யுள் ஒரு மூர்த்தி. முருகன் சுப்ரமண்யன் கம்மி. திருமால் விஷ்ணு சற்று அதிகம்.

விஷ்ணு வை அங்கே அதிகம் பரவிட்டாங்க: மும்மூர்த்தியுள் ஒரு மூர்த்தி. மோகினி கிளு கிளு கதைகள்! ஸ்கந்தனை", ஏனோ அங்கு அதிகம் பரவலை: மும்மூர்த்தி ஆக்கலை. ஆனாலும், சுப்ரமண்ய ஸ்வாமி, தேவ ஸேனாபதி என்ற பட்டம்!

அங்கு அதிகம் பரவாதவன் மட்டுமே தமிழ்க் கடவுள் முருகன் என்று இன்றைய கண்ணுக்குத் தெரிகிறான். ஆனால், முருகனும் திருமாலும் இரு வருமே தமிழ்த்தொன்மங்கள் என்று சங்கத் தமிழ்க் கண்ணுக்கு நல்லாவே தெரியும்!

முருகன் தமிழ்க்கடவுள் என்று சைவப் பெருமைக்கு இன்று சொல்லிக்கொண்டாலும் அந்தத் தமிழ்க் கடவுள் கதை பூராவும் சமஸ்கிருத, புராணக் கதை யாய் இருப்பது ஏன்?

நெத்திக் கண்ணுல தோன்றினாரு, 6 ஒடம்பு ஒன்னாச்சு, கைலாஸ மலையில் பழம் நீ அப்பா, பிரணவ மந்திர உபதேசம், வீரபாகு ஃப்ரண்ட் ஆனாரு, பாஹ சமஸ்க்கிருதம்: தோள் எ. பொருள்! அப்புறம் எப்படித் தமிழ்க்கடவுள்....

அசுரர் குடியையே கெடுத்தாரு, அசுரர் குடிகெடுத்த ஐயா வருக தூங்கும் குழந்தைகள் உட்பட அசுர பட்டணத்யையே தண்ணிக்குள் மூழ்கடிச்சாரு, தேவ ஸேனா கல்யாணம், "தமிழ்க்கடவுள்" முருகன் மேல் ஏன் பூராவும் சமஸ்கிருதக் கதைகள்? இந்த எளிய உண்மை நம் மக்களுக்கு உறைப்பதே இல்லை. அதான் மதம் என்கிற மாயை!

தங்கள் நடுகல்லும்/ தொன்மமும் பெருந் தெய்வமாய் மாறிப்போச்சு அப்போ ஆதி குடிகளின் கதி? கொல்லிப்பாவை, இசக்கி, சுடலை, சாத்தன்சாத்தி. இப்படி, முன்னோர்கள், வேறு வேறு பெயரில், வழிபட்டுக்குறுகிப் போயினர்! (சாத்தன்சாத்தி என்கிற தமிழ்ப்பெயர்கள்: சீத்தலைச் சாத்தனார், ஒக்கூர் மா சாத்தியார்)

மக்களும் மாறத்துவங்கியாச்சி அட, நம்ம முருகன் தானே, அங்கேயும் சுப்ரமண்ய ஸ்வாமியா இருக்கான்? கூடவே கிளுகிளு கதைகள்! கல்யாண வியாபார பரிகாரங்கள் ல்லாம் சொல்றாங்களே, வாழ்வில் வெற்றி பெறுவதற்கு? மன்னன் முதற்கட்ட மாற்றம்! மன்னன் இரண்டாம் கட்ட மாற்றம்!

அரசியலும் தன்னலமும் எதையும் செய்யும்!

முருக இயற்கை வழிபாடு குறுகி முருக புராண வழிபாடு பெருகிறது! பொய்யான கதைகளே மலிந்து போய், இன்று ஆலயம் தோறும், முருகத் தமிழ்க்கடவுள் திருமால் தமிழ்க்கடவுள் சமஸ்கிருதக்கடவுள் ஆகி நிற்கும் கோலம்.

சமணம் பௌத்தம்: இவை கூட வடக்கில் இருந்து வந்த நெறிகள் தான்! ஆனா அவர்கள் தமிழ்த்தொன் மத்தைச் சிதைக்கலை, புது நெறி, என்றே அறிமுகம் செய்தார்கள். கந்தனை ஸ்கந்த தீர்த்தங்கரர் ஆக்கலை!

சமஸ்கிருத நெறி மட்டுமே தமிழ் மரபியல் சிதைப்பு செய்தது. தொன்மத்தின் மேலேயே புராணம் ஏற்றினால்? எது இருந்தது? எது வந்தது? கண்டுபிடிக் கவே முடியாது! Thatz the Trick! Ir-reversible இயற்கை யான முருகனுக்கு 6 தலை, 12 கை, 18 கண்

நாமளும், ஆறு தலை தரும் ஆறுதலை ன்னு வார்த்தை விளையாட்டு" விளையாடி மகிழ்வு கொண்டு விடுகிறோம்: வெட்கக்கேடு.

சென்னைக்கு அருகே திருப்போரூர்: இதுபோன்ற பழமையான முருகன் கோட்டங்களில் இன்னிக்கும் நடுகல்லைப் பார்க்கலாம்! உருவமோ, முகமோ இருக்காது. ஆனா முகம் போல் எழுதி, அலங்காரத்தில் மறைச்சிருக்கும்!

யாரேனும், "ஹிந்து" மத அபிமானிகள் வாசிக்க நேர்ந்தால் மன்னித்து விடுங்கள். உங்களுக்குப் பிடிக்கலை ன்னு தெரியும், அதுக்காக தொன்மத்தை மாத்தி எழுதீற முடியாதே? வசையாடி / இழிவு செய்தால் கோச்சிக்குங்க, ஆனால் சங்க கால உண்மைக் கெல்லாம் கோசிக்காதீங்க, Please! REPORT THIS AD.

மனசாட்சி இருப்பின் நீங்களே யோசிங்களேன், சமணபௌத்தம் பாளிமொழி அதன் கலப்பு தமிழில் இருக்கா? வேத / பிராமணியமதம் சமஸ்கிருதம் ஏன் இது மட்டும் அதீதக்கலப்பு? அவரவர் மனசாட்சியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்

சங்கத் தமிழ் வாசிப்புக்கு காலம் அறிதல் இன்றிய மையாதது. கொஞ்சூண்டு புறநானூறு பாட்டில்..பஞ்ச பாண்டவர், இராமன் இதர தெய்வங்களின் குறிப்பு கூட வரும் (மிகச் சொற்பமாக)

ஒடனே பாத்தீங்களா பாத்தீங்களா? சங்கத் தமிழ்லயே ராமர் இருக்கார் பாருங்கோ. பேஷ் பேஷ்!

தமிழாள் ஸ்ரீ ராமரையே கும்புட்டாங்க! Bolo, Jai Sri Ram!" ன்னு எறங்கீறக் கூடாது.

அப்படின்னா, சதி தமிழாள் பண்பாடா என்ன? மாண்ட கணவனோடு, பெண்ணை நெருப்பிலே தள்ளல்! அதுவும் புறநானூற்றில், ஒரு மூலையில் லேசா வரும். இதுக்குத் தான் காலம் அறிதல் முக்கியம் ன்னு சொன்னேன்!

முதல், இடைச் சங்கத் தமிழில் இது போன்ற புராணக் குறிப்பு வராது! கடைச்சங்க காலம் கலப்புக்குப் பின்னரே, புராணம் லேசு மாசாய் வரும்! இவை தொகை நூல்கள், தொகுக்கப்பட்டவை! ஒரே காலத்தில் எழுதப்பட்டவை அல்ல! முதல்இடைச் சங்கப்பாட்டும் வரும், கடைச்சங்கப்பாட்டும் விர விவரும். ஆனா, எது எது எந்தக் காலம்? ன்னு அகச் சான்று உண்டு!

என் iPod Playlist இல், பாபநாசம் சிவன், மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி. இளையராஜா ரகுமான்னு தொகுத்து" இருக்கு! எல்லோரும் ஒரே காலமா என்ன? எம்.எஸ்.வி. போட்ட "Melody க்கு இன்னிக்கி Remix என்கிற Tragedy" வேற. இதேபோல், குறுந்தொகைக் கெல்லாம் "கடவுள் வாழ்த்து" ன்னு ஸிமீனீவீஜ் சொருகினார்கள்.

நினைவில் வையுங்கள்: எட்டுத்தொகையில் 8 கடவுள் வாழ்த்துச் செய்யுள்களும், சைவ சமயப் பிற்சேர்க்கையே செய்யப்பட்டதே!

மக்கள் வாழ்வியல்: குறிஞ்சி வெறியாடும் முருகன் கூத்து! முல்லை காதலர்கள், மாயோன் (திருமால்) மேல் சத்தியம் செஞ்சி, காதலை நிரூபிப்பது! இப்படி, வாழ்வியல் (Social Life);

ஆனால் இல்லாத நெற்றிக்கண்ணால் எரிப்பது? பரியை நரி ஆக்குவது? இது மக்கள் வாழ்வியல் அல்ல: புராணம்!

வடவரின் புதுக்கதையில் வருவதுபோல" ன்னே சங்கப்பாட்டும் இருக்கு It's just a "Myth", காலம் செல்லச் செல்ல, மதம் (எ) சக்தி வாய்ந்த ஆயுதம், நிறுவனப் படுத்தல் ஆகிவிட்டது, ஆனா அப்போதும் தமிழ்ச் சமூகம் தன்னை முழுசா ஒப்புக்குடுத்துடலை, சமஸ் கிருத நெறிக்கு! Kannagi is the Proof! கண்ணகி சொல்லும் தமிழ்நெறிச் சொல் அது எங்களுக்குப் பீடு (பெருமை) அன்று! பண்பாட்டின் பரவல் Expansion of Civilization:

முதலில் வைக்கிறார் தொல்காப்பியர்: காடு மலை, முதலில் தோன்றிய நாகரிகம் அல்லவா?

காடு மலை கடந்து மக்கள் புலம் பெயர்ந்த போது, தங்கள் தொன்மங்களையும் உடன் எடுத்தே சென்றார்கள்! மருதம் வேளாண்மை, நெய்தல் கடலாண்மை கண்டனர். மருத நிலம் வேந்தன் (அரசன்) மாறிக்கொண்டே இருப்பவன்.நெய்தல் நிலம் வருணன் / வருள்நன் (கடல்காற்று): மாறிக் கொண்டே இருப்பது, முருகன் / திருமால் போல் வேந்தனோ'காற்றோ ஒரு நிலைத்த அடையாளம் அல்ல! அதனால் மக்கள் வாழ்வியலில் வேந்தன் / வருணன் அதிகம் பேசப்படலை. துறை / கூத்து ன்னு வேந்தன் / வருணனுக்கு வாழ்வியலாய் ஒன்னு மேயில்ல: வெறும் நில அடையாளம் மட்டுமே!

கொற்றவை (எ) பழையோள் இவளும் தமிழ்க்கடவுளே! நடுகல்லாய் உதித்து, உருப்பெற்றவள்! பாலை நில எயினர்கள்/ வழிப்பறிக்கள்வர்களின் தெய்வம்! நாகரிகம் குறைந்த கள்வர் என்பதால் இவள் பேரிலே மிகுந்த இலக்கியப் பாடல்கள் இல்லீன் னாலும்..

திணை அளவில் இல்லாது, துறை அளவிலாச்சும் (கொற்றவை நிலை) குறித்து வைக்கிறார் தொல் காப்பியத்தில் தொல்காப்பியர். பேதம் இல்லாதவர், எவரையும் ஒதுக்காமல், உள்ளது உள்ளபடி தமிழாய்க் குறித்து வைக்கின்றனர்!

மாயோன் மேய மன்பெரும் சிறப்பின் தாவா விழுப்புகழ் பூவை நிலையும் ன்னு தொல்காப்பியர் சொல்லும் அந்தப் பூ வை என்பதே பூசை ஆனது. இப்படி இயற்கை வழிபாடாய் இருந்த ஒன்று.

நாள் செல்லச் செல்ல, புதிய புராணம் இலக்கியத் திலும் பரவத் துவங்கியாச்சு. வேந்தன் இந்திரபகவான் , வருள்நன் வருணபகவான் ன்னு ஆக்கியாச்சு! நினைவில் வைங்க, வேந்தன் இந்திரன் அல்ல! வேந்தன் மருத நில மன்னவர்கள்: (மாறிக்கொண்டே இருப்பவர்கள்)

அதேபோல் வருணன் வருள்நன். வருள் சூழ்தல்: நிலத்தை வருளும் சூழும். முது "வருண்", முந்து கிளவாச் செறிவு ன்னு திருக்குறளே இருக்கு! வருள்/வருண் சூழ்தல்!

தமிழ் வருணம் வேற : சமஸ்கிருத வர்ணம் வேற: வருள்வதால் வருணன்: வருளும் கடற்காற்று நெய்தல் நிலத்தெய்வம்! ஆனால், வேந்தன் இந்திரன் ன்னு ரைகளில் மாற்றி எழுதினார்கள்: இந்திர விழா என்று மன்னனும் தோற்றுவித்தான்!

வேதக் கடவுள்கள் சோமன் / இந்திரனை, லோக்கல் மதப்பரப்பலுக்காக "சற்றே ஒதுக்கி வைத்து", ஹோமம், யக்ஞங்களில் மட்டும் இந்திரனை விட்டுவிடாது பிடித்துக்கொண்டனர்! ஓம் இந்திராயா ஸ்வாஹா யாகத்தில் இந்திரனுக்கு அவிர்ப்பாகம்!

REPORT THIS AD

உலகெங்கும் ஆஸ்திகம் கடவுள் உண்டு: நாஸ்திகம் கடவுள் இல்லை! ஆனால் சம்ஸ்கிருத, பிராமணியக் கொள்கையில் மட்டுமே, ஆஸ்திகம் வேதம் உண்டு: நாஸ்திகம் வேதம் இல்லை (கர்ம மீமாம்சை இறை மறுத்து? ஆனால் வேதம் மறுக்காதவர்கள்)

வேதம் மறுத்த புத்தரும், மகாவீரரும் இவர்களைப் பொறுத்த மட்டில் நாத்திகர்கள்: நீ, இறைவனை மறுத்தாலும் பரவாயில்லை. எங்களுக்கு உடன் பாட்டால் நீயும் ஆத்திகனே! என்னே இறை அன்பு! கடவுளை விடவும், தங்கள் கட்டமைப்புக்கு உருவாக்கிக் கொண்ட வேதமே பெரிது!

அன்பை விடப்பெருங்கடவுளும் இலமே! என்று பாடும் சங்கத் தமிழ் மாண்பு எங்கே! இச்சுயநலம் எங்கே? Grammar = The Breeding Ground தமிழ் இலக்கணமே இவர்கள் முதலில் கை வைப்பது: Cut at the root! (உங்க இலக்கணத்தைத் திரித்து, உங்களுக்கே வழங்கும் பண்டிதாள்) ஒரு புடை உருவகம் "ஏகதேச" உருவகம்ன்னு இன்னிக்கி பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்திலெல்லாம் நிலைச்சிருச்சே! Why should Tamizh Grammar have "ek" & "ekam" inside it? Does Sanskrit Grammar has, Tamizh words "Or & Eer ("குழு & த்குழு)" in it? உங்க மனச்சாட்சியைக் கேளுங்கள்!

இது வடமொழி (எ) ஒரு தனிப்பட்ட மொழியின் குற்றமல்ல: அது நல்ல மொழி தான். அந்த மொழியில் ஊறிய, ஆதிக்க மனப்பான்மை, கொண்டவர்களின் குற்றமே இது! Does Sanskrit have Tamizh sounds டு & ங? But Tamizh "MUST" have sanskrit sounds நுழுகுளு & •! இதுதானே நியாயம் புகுத்து தமிழில் கிரந்த எழுத்தை!

தமிழின் சிறப்பான ழுக்குப் பதிலா, டபோட்டுக் கலாம்ன்னு தமிழ் இலக்கணத்தையே மாத்தி எழுதப் பார்த்தாங்க: தமிழ்க்கடவுள் முருகனே வந்து "ழ" க்குப் பதில் "ட" போடச் சொன்னான்னு சைவக்கதையும் புனையப்பட்டது: கச்சியப்ப சிவாச்சாரியின் கந்த புராணம்!

ஆனால், எத்துணை சமஸ்க்கிருத / மதம் மிகுந் தாலும் இன்று வரை தமிழ் மொழி இயல் தொல் காப்பிய அடிப்படையே! அதை எவரும் அசைக்க முடியலை!

காலங்காலமாய்ப் பின்னிப் பிணைந்து...இன்று வரை தொல்காப்பியமே காத்துக்குடுக்கும் நம் தமிழ்த்தொன்மம்!

Further Read/Ref:


1. ஞா. தேவநேயப் பாவாணர் தமிழர் சமயம்

2. தொ. பரமசிவன் பண்பாட்டு அசைவுகள்

3. மா. இராசமாணிக்கனார் கால ஆராய்ச்சி (febook)


தமிழர்களுக்கு நைவேத்யம் செய்யும் கடவுள்கள் இல்லை! என்ற தெளிவான எதிர்ப்புக் குரல், சங்கத் தமிழிலேயே! இதுபோல் பலப்பல அகச் சான்றுகள்!

நூல்: புறநானூறு(335) கவிஞர்: மாங்குடிக்கிழார், திணை: வாகை, துறை: மூதின் முல்லை, அடல் அரும் துப்பின்:

குரவே தளவே குருந்தே முல்லையென்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை:
கருங்கால் வரகே இருங்கதிர்த்தினையே
சிறுகொடிக்கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான்கு அல்லது உணவும் இல்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விளங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே!

குரவம், தளவம் (பிச்சிப்பூ) குருந்து, முல்லை. இந்த நான்குமே இவங்க குடிப்பூக்கள்.

வரகு, தினை, கொள்ளு, அவரை இந்த நான்குமே இவங்க குடி உணவு

துடியன், பாணன், கடம்பன், பறையன் இந்த நான்குமே இவங்க குடி முறைகள்

அரசின் உயர் அலுவலர் பறையன் ஙிஞுமீ மீஷீபீணீஹ் வீமீக்ஷ் ணீஸீ ஷீயீபீமீஸீஉவீஸ்மீ ஷ்ஷீகூஷீபீ; எள்ளல் பேர்வழிகள் கும்மி அடித்து அடித்து, பறையன் என்னும் செந்தமிழ்ச் சொல், தீச்சொல்லாய் மாறிவிட்டது.

ஒளி வீசும் தந்தம் உள்ள யானை அதையே சாய்க்க வல்லவர். அப்படிச் சாய்க்கும் போது தாமும் சாய்ந்து இறந்தார்கள்..குடி காத்த முன்னோர்.

"நைவேத்யம்" செய்யும் கடவுள், எங்களுக்கு இல்லை! நெல் உகுத்துப்பரவும் கடவுளும் இலவே"!

இது போன்ற அகச்சான்று பல சங்கத் தமிழ்ப்பாடல்கள்! மன்னன் மாறினாலும், தான் மாறாது. தமிழ்க் கொள்கைக்கு எதிரான சமஸ்கிருத, வேத, பிராமணியம், அவற்றைத் தமிழ்ச்சமூகம் எதிர்த்தமைக்குச் சாட்சியாய் ஆங்காங்கு நிற்கும் சங்கத் தமிழ் வாழ்க! •

பூமியின் மேற்பரப்பு 71 விழுக்காடு கடலை உள்ளடக்கியதாக உள்ளது. 97 விழுக்காடு நீரைக் கொண்டுள்ளதாக இருக்கின்றது. இப்படி பரந்து விரிந்து கிடக்கும் கடலை நம்பி, பல கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடலில் இருந்து மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை கடல், வாரி வழங்கி வருகிறது. இதற்கிடையில், வரும் காலங்களில் மனித குலத்திற்குத் தேவையான உணவில், 90 விழுக்காடு கடலிலிருந்தே கிடைக்கப் பெறும் என விஞ்ஞானிகள் கூறி வருகின்றனர். அத்தகைய கடல் உணவுகளை, மழை, வெயில், புயல், சுனாமி எனப்பராராது, கரைக்கு கொண்டுவந்து சேர்ப்பவர்கள் மீனவர்கள். அப்படிப் பட்ட மீனவர்களுக்காக நவம்பர் 21ஆம் நாளை "மீனவர் நாள்" என்று உலகமெங்கும் உள்ள மீனவர்கள் அனுசரிக்கின்றனர். மீனவர்களுடைய மூலப் பிரச் சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற அடிப்படை யில் கடல்சார் மக்கள் நல சங்கமம் அன்றைய நாளை மீனவர்களாகிய நாம் அரசியல் எழுச்சி நாளாக அனுசரிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம்.

இந்தியக் கடற்கரையான 7516 கி.மீட்டர் நீளத்தில் 1076 கி.மீட்டர் நீளமுடைய தமிழகம், நாட்டிலேயே இரண்டாவது கடல் வளத்தைக் கொண்டிருக்கக்கூடிய மாநிலமாகும். மேற்கண்ட இக்கடல் வளத்தை நம்பி 608 மீனவக் கிராமங்களும் 11 லட்சத்துக்கும் அதிகமான மீனவக் குடும்பங்களும் உள்ளனர். சராசரியாக ஒவ்வொரு மீனவக் கிராமமும் 1.5 கி.மீட்டர் தூரத்தில் இருக்கிறது. கடந்தாண்டு கணக்கின்படி சுமார் ஆறு லட்சம் டன் மீன்பிடிப்பு தமிழகத்தில் நடந்துள்ளது. தமிழகத்தில் அந்நியச் செலாவணியாக சுமார் 5,000 கோடி ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் உள்நாட்டு மீனவர்கள் 2.3 லட்சத்துக்கும் அதிகமான மீனவக் குடும்பங்களும் உள்ளனர். மீன் தொழில் சார்பு குடும்பங்கள் பல லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளனர். நம் நாட்டின் வளர்ச்சி 5.7 விழுக்காடு ஜிடிபி யில் 1 விழுக்காடு மீன்பிடிப்புத் தொழிலைச் சார்ந்தே உள்ளது. அதாவது 100க்கு 20 விழுக்காடு.

நம் நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்த 1970களில் நீலப்புரட்சித் திட்டம் என ஒன்றை



# மண்டல் கமிசன் பரிந்துரையின்படி மீனவ மக்களை பழங்குடி இனப் பட்டியலில் சேர்த்திட

## தமிழகம் தழுவிய அரசியல் எழுச்சிப் பரப்புரை!

நடுவண் அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி பல மேம்பாட்டுத் திட்டங்களை நடுவண் அரசு அறிமுகப்படுத்தியது குறிப்பாக விசைப்படகுகள் வாங்க கடனுதவி, டீசலுக்கு மானியம் போன்றவை அரசினால் வழங்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு காலகட்டத்தில் உலகமய, தாராளமய, தனியார்மயக் கொள்கைகள் தீவிரமடைந்த சூழலில், பன்னாட்டு ஏகபோக முதலாளிகள், நம் நாட்டில் உள்ள பணியா, மார்வாடிகளின் கண்களை கடல் வளம் உறுத்தியது. இதன் விளைவாக, பாய்மரப் படகுகள் உலாவந்த கடலில் பெரும் கப்பல்கள் அணி வகுத்தன. கொஞ்சம் கொஞ்சமாக மார்வாடி, பன்னாட்டு முதலாளிகளின் வேட்டைக் காடாக கடல் மாறியது. மொத்த கடல் மீன் வளத்தில் 60 விழுக்காடு சுரண்டப்பட்டுவிட்டது. கடலையே நம்பி இருந்த கடல்சார் பழங்குடியின மக்களின் கடலும் கடல்சார் நிலமும் பறிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு சுனாமி பேரழிவுக்குப் பின் மீனவர்களின் பாதுகாப்பு என்கிற பெயரில், குறிப்பாக கடற்கரை ஒழுங்குமுறைச் சட்டம் போன்ற சட்டங்களை இயற்றி, மீனவ சமுதாய மக்களை அச்சுறுத்தி, அவர்களின் கடற்கரையோரம் வாழும் உரிமையைப் பறித்துவிட்டு, பெரும் முதலாளிகளின் ரசாயன தொழிற்சாலைகள், உல்லாச விடுதிகள், ஆடம்பர சொகுசுப் பங்களாக்களை, கடற்கரையோரங் களில் அமைத்துக் கொள்ள அனுமதி அளித்துள்ளது அரசு.

நம் மீனவர்களின் வாழ்வுரிமையையும் அன்றாடச் செயல்பாடுகளையும், இந்திய அரசு நடைமுறைப் படுத்தவுள்ள "புதிய தேசிய மீன்பிடி மசோதா 2019" முடக்கிப் போடப் போகின்றது.

இந்நிலையில் அரசு கொண்டு வந்துள்ள புதிய வரைவு மசோதா, விசைப்படகுகள் மற்றும் பாரம் பரியப் படகு வகைகளுக்கிடையே உள்ள பாரதூர மான வேறுபாடுகளையோ, அவற்றின் மீன்பிடித் திறன்களையோ கருத்தில் கொள்ளாமல் அனைத்தையும் "மீன்பிடிக் கலன்" என ஒரே வார்த்தையில் வரையறுத்து அனைவரையும் மீனவர்கள் என்று பொதுவில் வகைப்படுத்தி விதிமுறைகளையும் தண்டனைகளையும் வகுத்துள்ளது.

இச்சட்டப்படி எல்லா வகைப்படகுகளும் மத்திய அரசிடம் கட்டணம் செலுத்தி அனுமதி பெற வேண்டும் என்கின்ற மோசமான சட்டம் வர இருக்கின்றது.

பிரிட்டீசு ஆட்சிக் காலத்தில் கூட கல்வி சமூக அந்தஸ்து மற்றும் பொருளாதாரத்தில் ஏற்றம் கண்ட மீனவர் சமூகம், விடுதலைக்குப் பின்பு நடுவணிலும் மாநி லத்திலும் ஆண்ட கட்சிகளும் ஆண்டு



கொண்டிருக்கின்ற கட்சிகளும் பல்வேறு மீனவ விரோதத் திட்டங்களைக் கொண்டு வந்ததனால் இன்று பல்வேறு வகையில் துன்பங்களுக்கு மீனவர்கள் ஆளாவதை கண்கூடாக கண்டும் கேட்டும் வருகின்றோம்.

மீனவர்களின் வாழ்விடங்கள், வாழ்வாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற உரிமைகள் தொடர்பான அனைத்தையும் பாதுகாக்க இச்சமூகத்தை "பழங்குடி இனத்தில்" சேர்ப்பது மட்டுமே தீர்வாக இருக்க முடியும்.

நம் மீனவ சமூகத்தை பழங்குடியினத்தில் சேர்ப்ப தற்கான அனைத்துத் தகுதிகளும் நமக்கு இருக்கின்றது.

1999ஆம் ஆண்டு சூன் மாதம் தேசியப் பழங்குடியினர் ஆணையம் சில சாதிகளை பழங்குடி இனத்தில் சேர்ப்பதற்கான ஐந்து வரையறைகளை நிர்ணயித்தது.

1. சமூகத்தில் பின்தங்கிய நிலை

2. பழமையான பண்புகள் இருப்பதற்கான அறிகுறிகள்

3. தனித்துவமான பண்பாடு

4. பூகோளரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட நிலை

5. பிற சமூகங்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதில் உள்ள கூச்சம் அல்லது தயக்கம்

சமூகத்திலும் கல்வியிலும் மிகவும் பின் தங்கிய நிலையில்தான் மீனவ சமூகம் இருக்கின்றது. சமூக அந்தஸ்து என்பது கல்வி, அரசு வேலைவாய்ப்பை மையமாக வைத்தே இருக்கும். மீனவர்களின் கல்வி அறிவின் நிலையைப் பார்த்தோமானால் பட்டியல் இன, பழங்குடி இனத்தைக் காட்டிலும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கின்றனர். அரசு வேலை வாய்ப்பில் 0.01 விழுக்காடு கூட மீனவர்கள் இல்லை.

மீனவர்களின் பழமையான பண்புகளுக்கான அறிகுறிகள் என்ன என்று பார்த்தீர்களானால்,

உலகத்தில் முதலில் தோன்றிய தொழில் வேட்டைத் தொழில். காட்டில் நடப்பது மட்டுமே வேட்டைத் தொழில் என முடிவிற்கு வந்துவிடக் கூடாது. கடலில் நடப்பது வேட்டைதான். பெரும்பான்மையான மீனவர்களின் வாழ்வாதாரம் வேட்டைத் தொழிலை நம்பித்தான் இருக்கின்றது.

மீனவர்களுக்கென தனித்துவமான பண்பாடு உண்டு. எந்த சமூகத்திற்குமே இல்லாத ஒரு சமூக உள்கட்டமைப்பு என்ன என்றால் "மீனவப் பஞ்சாயத்து". மீனவ பஞ்சாயத்தில் பாரம்பரிய மீனவர்கள் மட்டும்தான் உறுப்பினராக முடியும். இந்தப் பாரம்பரியப் பஞ்சாயத்து முனவர்களுக்கு ஏற்படும் தொழிற் பிரச்சனைகளையும், தனி நபர் பிரச்சனை களையும் மற்ற சமூகங்களுடன் ஏற்படும் பிரச்சனை களையும் நிருவகித்து, கூட்டாக முடிவெடுப்பதை இங்கு உயர்ந்த பண்பாடாகக் காண முடியும். இது பழங்குடி யினருக்கான முக்கிய ஜனநாயக இயல்பாகக் காண முடியும்.

மீனவர்கள் பூகோள ரீதியில் தனிமைப்படுத்தப் பட்டு இருப்பதைக் காண முடியும். அதாவது முக்கியச் சாலைகளிலிருந்து ஒவ்வொரு மீனவக் கிராமங்களும் மூன்று கிலோ மீட்டரிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் வரை தள்ளித்தான் இருக்கின்றன. மற்ற மக்களுடன் மீனவ சமூகங்களுடனான தொடர்பு மிக மிகக் குறைவு.

மீனவ சமூகம் ஒரு சுயமரியாதையுள்ள சமூகம். மீனவர்கள் மத்தியில் அவர்களின் உழைப்புக்கு ஏற்ற கூலி கிடையாது. தொழிலில் மீனவர்களுக்கு இருப்பது பங்கு மட்டுமே. கடலுக்கு மீன் பிடிக்கப் போய்விட்டு வந்து, பங்கு பிரிப்பார்கள். பங்கு பிரித்து அவர்களுக் கான பங்கை எடுத்துக் கொள்வார்கள். இப்படிப் பங்கு பிரிப்பதில் நீயும் நானும் இதனால் சமம் என்ற கருத்துருவாக்கம் வருகிறது. சுயமரியாதை வருகிறது. சுய கௌரவம் வருகிறது. சுயமரியாதையும் சுயகௌரவமும் உடையவன் இன்னொருவரிடம் கையேந்தி நிற்கமாட்டான். இதனால் பிற சமூகங்களுடன் தொடர்பு மிக மிகக் குறைவாகத்தான் வைத்திருப்பார்கள். சுயமரியாதை உள்ள சமூகத்திற்கு, பிறரால் எப்போதாவது தீங்கு ஏற்படுமாயின், அதன் எதிர்விளைவு மிக மோசமானதாக இருக்கும். அந்த அடிப்படையில்தான் மண்டல் கமிசன் அறிக்கை இதர பரிந்துரைகள் 13.37 (1) இல் மீனவர்களை பழங்குடி யினர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு பரிந்துரைக் கின்றது.

ஜனநாயகத் தத்துவ நீரோட்டத்தில் மீனவச் சமூகம் பங்களிக்கின்ற அளவிற்கு, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பங்கேற்காததினால், அரசின் வளர்ச்சித் திட்டத்தில் மீனவர்களால் முழுமையான பங்கைப் பெற முடியவில்லை. ஒவ்வொரு மீனவக் கிராமத்தையும் நாம் எடுத்துக் கொண்டோமானால், சுய ஆட்சித் தத்துவத்தின்படி மீனவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துதான் ஆளுகின்றது.

ஒவ்வொரு மீனவக் கிராமத்திற்கும் பொதுச் சொத்து உள்ளது. மீனவர்கள் தங்கள் மரபுசார் அறிவைப் பயன்படுத்தித்தான் இன்றும் மீன் பிடித்து வருகின்றார்கள். மீனவர்களுக்கு மரபுசார் அறிவு என்பது அவர்களுடைய இரத்தத்திலேயே ஊறிப்போய் உள்ளது. வேட்டைக்காரப் பண்பாட்டிற் கிணங்க நாடோடிகளாக இடம் விட்டு இடம் பெயர்ந்து, மீன்பிடி வேட்டைக்குச் செல்வோரைக் காண முடிகிறது. இப்படிப்பட்ட சுயசார்புள்ள மீனவச் சமூகத்திற்கு மண்டல் கமிசன் பரிந்துரைப்படி மீனவர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என இருந்தும் இதுவரை ஆண்ட கட்சிகளும் ஆளுகிற கட்சிகளும் மீனவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் அரசியல் பிரதிநிதித்துவம் கொடுக்க முன்வரவில்லை. ஆதலால் நாமே, நம் சமூகத்தைப் போன்று சுய சார்புடன் அரசியலில் எழுச்சி பெற்றல் மட்டுமே நம் மீனவச் சமூகம் சந்திக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கப் பெறும்.

ஆதலால் தேசிய அளவில் நடந்தேறி வரும் பிரச்சாரத்தில் ஒரு அங்கமாக, தமிழக மீனவர்களும் தமிழகம் தழுவிய பிரச்சாரத்தில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இப்பிரச்சாரத்தில், இந்தியாவின் இரும்பு மங்கை என அழைக்கப்பட்ட பூலாந்தேவியின் மூத்த சகோதரியும், ஏகலைவன் சேனாவின் தேசியத் தலைவியுமான திருமதி ருக்குமணி தேவி அவர்கள் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

தமிழகத்தைச் சேர்ந்தவரும் திரு. கன்சிராமின் பகுஜன் இயக்கத்தின் மூத்த தலைவரும், புதுடெல்லியை தலைமை இடமாகக் கொண்டு இந்தியா முழுவதும் ஓபிசி, எஸ் சி, எஸ் டி மக்களை ஒருங்கிணைத்து அரசியல்படுத்தி வரும் திரு. ஜீவன் குமார் மள்ளா, எம்.ஏ., பி.எல்., அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்ள இருக்கின்றார்.

ஆகையால் மீனவர் சமூகமாகிய நாம், ஒற்றை முழக்கமாக நம்மை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான வலுவான பிரச்சாரத்தை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி அதிகார அரசியலை ஏற்படுத்தப் புறப்படுவோம்.

**எல். பிரவீன் குமார் பரதவர்,** எம்.பி.ஏ., பி.எல்.,

பொதுச் செயலாளர்,

கடல்சார் மக்கள் நலச் சங்கமம்.

95000 94378, 98413, 77691.

தாவரங்கள் மனிதனுக்கு சுவாசிக்க சுத்தமான காற்றையும் காய்கறி, பழங்கள், தானியங்கள் ஆகிய உணவுப் பொருட்களையும் தருகின்றன. அதோடு மட்டுமின்றி அவை நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இத்தகைய செடி, கொடி, மரங்களை மூலிகை என்றழைக்கிறோம். நம்மிடையே புழக்கத்தில் இருக்கும் தாவரங்களில் 40 விழுக்காடு மூலிகைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தகைய இயற்கை தாவரங்களில் உள்ள மருத்துவ குணங்களைக் கண்டறிந்து, அவற்றை முறையாகப் பயன்படுத்தி நோய்களுக்கு தீர்வு கண்டனர் பழந்தமிழர்கள்.

சித்தர்கள் அதிக அளவு மூலிகை வைத்தியங்களை மேற்கொண்டதால் அது சித்த வைத்தியம் என்று அழைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் சித்த மருத்துவக் கல்லூரிகளை அரசு தொடங்கி சித்த மருத்துவத்தைக் கற்றுக் கொடுத்து வருகிறது.

இத்துறையில் புதிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார், சித்த மருத்துவர் மைக்கேல் செயராசு. இவர் மூலிகை மருத்துவம் பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். மருத்துவ குணமிக்க மூலிகைகளை பொதுமக்களுக்கு அடையாளங்காட்டும் பணியிலும், எந்த மூலிகை எப்படி மருந்தாகிறது என்பதை விளக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார். நெல்லை சித்த மருத்துவக் கல்லூரியில் இளநிலை சித்த மருத்துவப் படிப்பை நிறைவு செய்த இவர், அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகை மலை அடிவாரத்தில் தனது வைத்தியசாலையை நிறுவி உள்ளார். உலகத் தமிழ் மருத்துவக் கழகம் என்பதையும் உருவாக்கியுள் ளார். இவரது சித்தர் அறிவியல் கலைக்கூடத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு மூலிகை களைப் பற்றி நேரடி களப்பயிற்சி அளிக்கிறார். அதற்காக இவர் பாபநாசம் மலை அடிவாரப்பகுதியில் மூலிகைப் பண்ணைத் தோட்டமும், நாற்றங்காலும் அமைத்துள்ளார். அங்கு 200 வகையான நாற்றுகளையும், 700 வகையான மூலிகைகளையும் வளர்த்து பராமரித்து வருகிறார்.

பாபநாசம் தெப்பக்குளம் மாசு அடைந்திருந்தது. அதனை இந்து சமய அறநிலையத்துறை அனுமதியுடன் சுத்தம் செய்து, சுற்றிலும் ஆயிரக்கணக்கான மூலிகைச் செடி, மரங்களை நட்டு பராமரித்து வருகிறார்



# மைக்கேல் மூலிகைப்பண்ணை

மைக்கேல் செயராசு. மேலும் இங்குள்ள சுவாமி அம்பாள் அமரும் மண்டபத்தைச் சுற்றி, கடல் மட்டத்தில் இருந்து இரண்டாயிரம் அடி உயரத்துக்கு மேல் வளரக்கூடிய மரக்கன்றுகளை நடவு செய்து மரங்களாக வளர்த்தெடுத்திருக்கிறார். இவர் மூலிகை முற்றம் என்ற செயல்திட்டத்தை உருவாக்கி, வீடுகள் தோறும் மூலிகை வளர்க்கவும் ஆலோசனை வழங்கிவருகிறார்.

இவரது செயல்பாடுகளால் பாபநாசம் அடிவாரப் பகுதி மூலிகை பண்ணைகளாகவும் சுகாதாரமான படித்துறைகளாகவும் மாற்றம் கண்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சிக்குன் குனியா, டெங்குக் காய்ச்சல் வேகமாக பரவியபோது நிலவேம்பு குடிநீரை தெருத்தெருவாகச் சென்று அங்கேயே காய்ச்சி மக்களுக்கு வழங்கினார்கள் அதிலும் அவரது பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

மூலிகைகளை அடையாளங் காணுதல் மற்றும் பலன்களை அறியும் பயிற்சி பற்றி சித்த மருத்துவர் மைக்கேல் செயராசு கூறியதாவது:

“நோய் வராத அளவுக்கு நமது உடல் நலத்தைப் பேண நமக்கு தெரிந்திருக்க வேண்டும். நோய் வந்துவிட்டால் எப்படி குணப்படுத்துவது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். காலையில் இஞ்சியும், மதியம் சுக்கும், மாலையில் கடுக்காயும் ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும். தற்போது நாம் இயற்கையான சாப்பாடு முறையையும், இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையையும் மறந்து விட்டோம். அதனால்தான் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படு கிறோம். அனைத்து வகையான காய்ச்சலையும் குணமாக்கும் சக்தி நிலவேம்பு குடிநீருக்கு இருக்கிறது.

மக்கள் நாட்டு மருந்துக் கடைக்குச் சென்று நிலவேம்பு குடிநீரில் சேர்க்கக்கூடிய 9 மூலிகைகளையும் வாங்கி சம அளவு எடுத்துப் பொடியாக்கி, அவற்றை நீரில் கொதிக்க வைத்து இளஞ்சூட்டில் பருகினால் போதும். தமிழ் மருந்துகளை சற்றுக் குறைவாகவோ, சற்றுக் கூடுதலாகவோ பயன்படுத்திவிட்டாலும் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.

மூலிகை மருந்துகளை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்றால், அவற்றின் மீது மக்களுக்கு இருக்கும் பயம் அகலவேண்டும். அந்தப் பணியை தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். மூலிகைச் செடிகள் என்பது நமது வீட்டைச் சுற்றியும், வயல்வெளிகளிலும் சாதாரணமாக வளர்ந்து கிடக்கிறது. அதனை அடையாளங்கண்டு, பாதுகாத்து எல்லோரும் பயன்படுத்த வேண்டும். மக்கள் மூலிகைகளை அடையாளங்கண்டு கொண்டால் மட்டும் போதாது. அதில் இருந்து தைலம், சூரணம், மணப்பாகு, லேகியம் போன்றவைகளை எப்படித் தயாரிக்க வேண்டும்? எப்படி பயன்படுத்த வேண்டும்? என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

எங்களிடம் களப் பயிற்சிக்கு வருகிறவர்களுக்கு பொதிகை மலைப் பகுதியில் உள்ள மூலிகைச் செடிகளை நேரடியாக அடையாளங்காட்டி 2 நாட்கள் பயிற்சி அளித்து வருகிறோம். எல்லா வீடுகிளிலும் மூலிகைத் தோட்டங்கள் அமைக்க வேண்டும், மக்கள் அதனை பயன்படுத்த வேண்டும் என்பதும் எங்கள் நோக்கம். கிராமங்களில் மளிகைக்கடை இருப்பது போல் நாட்டு மருந்துக் கடைகளும் செயல்பட வேண்டும் என்பதும், அந்த அளவுக்கு மக்கள் நாட்டு மருந்துகளை பயன்படுத்தும் நிலை உருவாக வேண்டும் என்பதும் எங்கள் விருப்பமாகும்“ என்றார்.

### நட்சத்திரத் தாவரங்கள்

சோதிட சாத்திரத்தில் 12 ராசிகளும், 27 நட்சத்திரங் களும் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் தனித் தனியான தாவரங்களை பழந்தமிழர்கள் அடையாளங் கண்டு, வகைப்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் பாபநாசத்தில் உள்ள பரிகார படித்துறைக் கரையில் நடவு செய்யப்பட்டு உள்ளது. இந்த மரங்கள் வளர்ந் தால் பொதுமக்களின் நம்பிக்கைப்படி ஒவ்வொரு ராசிக்காரர்களும், தங்களுக்கு உரிய மரத்தை தேர்வு செய்து சுற்றிவரவும், அனைத்து மரங்களையும் சுற்றி வந்து தாமிரபரணி ஆற்றில் நீராடி தங்களது பரிகாரங்களை நிறைவு செய்யவும் முடியும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தாமிரபரணி ஆற்றங்கரையைச் சுத்தப்படுத்தி வேலி அமைத்து 150 க்கும் மேற்பட்ட மர வகைகளை நட்டு, 5 பூங்கா தொகுதிகளாக பராமரித்து வருகிறோம். இதில் பொதிகை மலையில் மட்டுமே காணப்படும் 82 வகையான மரங்களை ஒரு தொகுதியில் நடவு செய்து அதற்கு பொதிகைத் தோட்டம் என்றும் பெயரிட்டு உள்ளோம். இந்த 4 தொகுதிகளில் மரக்கன்றுகள் பெரிய அளவில் வளர்ந்த பிறகு சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து ரசிக்கும் வகையில் பூங்காவாக மாற்றவும் திட்டமிடப்பட்டு உள்ளது“ என்கிறார், மருத்துவர் மைக்கேல் செயராசு.

### வீட்டிற்கு முக்கியமான மூலிகைகள்

வீடுகள் அனைத்திலும் முக்கியமான 12 மூலிகைகள் இடம் பெற வேண்டும். அவை வீட்டு மருத்துவர் போல் செயல்படும். அந்த மூலிகைகளின் பெயர்கள், ஆடாதொடை, ஓமவல்லி, முடக்கறுத்தான், சோற்றுக்

கற்றாழை, நிலவேம்பு, நொச்சி, மஞ்சள் கரிசாலை, வல்லாரை, துளசி, கண்டங் கத்தரி, மருதோன்றி, தூதுவளை.

**கருப்பை நோய் தீர்க்கும் அசோக மரம்**

நெட்டிலிங்க மரத்தை தவறாக நாம் அசோக மரம் என்று கூறுகிறோம். உண்மையான அசோக மரம் பாபநாசம் மலையில் உள்ளது. பெண்களின் கருப்பை நோய்களுக்கு இந்த மரத்தின் பட்டையை உரித்துப் பயன்படுத்தலாம். கேரளா அரசு அசோக மரத்தை அதிக அளவு வளர்க்க முயற்சி செய்துள்ளது.

விழி கொடி மரம் திருச்செந்தூர் வள்ளி குகைக்குச் செல்லும் பகுதியில் காணப்படும். இந்த மரத்தில் குழந்தைப் பேறு வேண்டி தொட்டில் கட்டுகின்றனர். இதன் இலையை அரைத்து மாதவிடாய் நாட்களில் குடித்து விரதம் மேற் கொண்டால் குழந்தைப் பேறு கிடைக்கும். இந்த இலையை அரைத்து சாறு எடுத்தால் அது ரத்தம் போல் உறைந்து விடும். சிவகாசி, வெம்பக்கோட்டை, ஓடப்பட்டிப் பகுதிகளில் வீழி அல்லது விழுதி என்ற பெயரில் இவை காணப்படுகிறது. இது பாதுக்காக்கப்பட வேண்டிய தாவரம்“ என்கிறார் மருத்துவர் மைக்கேல் செயராசு.

**கொடம்புளி**

கொடம்புளி எனப்படும் பழம்புளி யைத்தான் நாம் பண்டைய காலத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்தோம். தற்போது நாம் பயன்படுத்துவது அரேபிய நாட்டுப் புளி ஆகும். முசுலீம் சமூகத்தி னரின் வருகைக்குப் பின்னரே இந்த வகை புளிய மரங்களை நட்டு புளியைச் சேகரித்து பயன்படுத்தத் தொடங்கி உள்ளோம்.

இதற்குப் பதில் கொடம்புளியை உணவில் சேர்த்துக் கெண்டால் கூடுதல் ஆரோக்கியத்துடன் திகழலாம். இந்த வகை புளிய மரங்கள் பொதிகை மலையில் ஒரு சில இடங்களில் காணப்படுகிறது. இதனையும் வளர்த்துப் பயன்படுத்தலாம். இது வரைவாக காய்த்து பலன் கொடுக்கும் தன்மை கொண்டது.










# புதிய மாவட்டங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தின் கீழ் காஞ்சிபுரம், திருப்பெரும் புதூர் ஆகிய இரண்டு வருவாய்க் கோட்டங்கள் இடம் பெறுகிறது. இந்த மாவட்டத்தில் காஞ்சிபுரம், உத்தரமேரூர், திருப்பெரும்புதூர், வாலாஜாபாத், குன்றத்தூர் (புதிது) ஆகிய 5 தாலுகாக்கள் வருகின்றன.

திருப்பெரும்புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்படும் வருவாய்க் கோட்டத்தில் திருப்பெரும்புதூர், குன்றத்தூர் தாலுகாக்கள் இடம் பெறும். காஞ்சிபுரம் வருவாய்க் கோட்டத்தின் கீழ், காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத் ஆகிய தாலுகாக்கள் வருகின்றன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, மதுராந்தகம், தாம்பரம் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்கள் இடம் பெறும். செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், திருக்கழுங்குன்றம், திருப்போரூர், தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் (புதிது) ஆகிய எட்டு தாலுகாக்கள் இம்மாவட்டத்தின் கீழ் வருகின்றன.

செங்கல்பட்டு வருவாய்க் கோட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, திருப்போரூர், திருக்கழுங்குன்றம் ஆகிய தாலுகாக்களும், தாம்பரம் வருவாய்க் கோட்டத்தின் கீழ் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் ஆகிய தாலுகாக்களும் இடம் பெறுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் பிரிக்கப்படு கிறது. பிரிக்கப்பட்ட பிறகு திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ் திருநெல்வேலி, சேரன்மகாதேவி ஆகிய வருவாய்க் கோட்டங்கள் இடம் பெறும். திருநெல்வேலி, பாளையங் கோட்டை, மானூர், நாங்குநேரி, ராதாபுரம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, திசையன்விளை ஆகிய எட்டுத் தாலுகாக்கள் இம்மாவட்டத்தின் கீழ் வரும்.

தென்காசி மாவட்டத்தின் கீழ் தென்காசி, சங்கரன்கோவில் (புதிது) ஆகிய 2 கோட்டங்களும், தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், சிவகிரி, வீரகேரளம்புதூர், சங்கரன்கோவில், திருவேங்கடம், ஆலங்குளம் ஆகிய எட்டுத் தாலுகாக்களும் வரும்.

விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து பிரித்து, கள்ளக்குறிச்சி யைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தின் கீழ் விழுப்புரம், திண்டிவனம் ஆகிய வருவாய்க் கோட்டங்களும் விழுப்புரம், விக்கிரவாண்டி, வானூர், திருவெண்ணைநல்லூர் (புதிது), திண்டிவனம், செஞ்சி, மேல்மலையனூர், மரக்காணம், கண்டாச்சிபுரம் ஆகிய ஒன்பது தாலுகாக்கள் வருகின்றன.

கள்ளக்குறிச்சி புதிய மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் வருவாய்க் கோட்டங்களும் கள்ளக் குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், திருக்கோவிலூர், உளுந்தூர்ப் பேட்டை, கல்வராயன் மலை (புதிது) ஆகிய ஆறு தாலுகாக்கள் இடம் பெறுகின்றன.

வேலூர் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு திருப்பத்தூ ரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும் ராணிப்பேட்டையை தலைமையிட மாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும் உருவாக்கப் படுகிறது.

அதன்படி திருப்பத்தூர் புதிய மாவட்டத்தில் திருப்பத்தூர், வாணியம்பாடி (புதிது) ஆகிய 2 வரு வாய்க் கோட்டங்களும் திருப்பத்தூர், வாணியம்பாடி, நாட்ராம்பள்ளி, ஆம்பூர் ஆகிய நான்கு தாலுகாக்களும் வருகின்றன.

இராணிப்பேட்டை புதிய மாவட்டத்தில் ராணிப் பேட்டை, அரக்கோணம் (புதிது) ஆகிய இரண்டு வருவாய்க் கோட்டங் களும் வாலாஜா, ஆற்காடு, நெமிலி, அரக்கோணம் ஆகிய 4 தாலுகாக்களும் இடம் பெற்றுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம் (புதிது) ஆகிய இரண்டு வருவாய்க் கோட்டங்களும், வேலூர், அணைக்கட்டு, காட்பாடி, குடியாத்தம், பேரணாம் பட்டு, கே.வி.குப்பம் (புதிது) ஆகிய ஆறு தாலுகாக்களும் இடம் பெறும்.

**ஜோ. எஸ்தர் ரோஸ்லின் பி.இ.,**

அங்கோர் நகரில் கட்டப்பட்ட ஏரிகள் பெரும்பாலும் மழைத்தண்ணீரை நம்பி இருந்தன. மழைக் காலங்களில் கிடைக்கும் மழைத்தண்ணீர், அந்த ஏரிகளில் சேகரித்து வைக்கப்பட்டு, வறட்சி காலங்களில் வயல்களுக்கு வினியோகிக்கப்பட்டன. டோன்லே சாப் ஆற்றுத்தண்ணீரும் இந்த ஏரிகளில் சேமித்து வைத்து வழங்கப்பட்டன.

கம்போடிய மக்களின் முக்கியமான உணவு, அரிசியும் மீனும் ஆகும். அவர்களுக்குத் தேவையான மீன்கள் டோன்லே சாப் ஏரி மூலம் அபரிமிதமாகக் கிடைத்தன.

அரிசிக்காக அவர்கள் அதிக அளவு வயல்களில் நெல் விவசாயம் செய்தனர்.

அனைத்து வயல்களிலும் முப்போகம் விளையும் வகையில், தண்ணீர் முறைப்படி வினியோகம் செய்யப்பட்டது தான், ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கம்போடியர்களின் வியத்தகு சாதனையாக இப்போது போற்றப்படுகிறது.

விவசாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக கம்போடிய மன்னர்கள், தமிழக மன்னர்களைப் பின்பற்றி கட்டிய சில ஏரிகள், மிகப்பிரமாண்டமாகக் காட்சி அளிக்கின்றன.

யசோதர தடாகா எனப்படும் கிழக்கு பேரேரி 7.5 கிலோ மீட்டர் நீளமும் 1.8 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது. சியம் ரீப் ஆறு மூலம் இதற்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. 5 கோடி கன மீட்டர் தண்ணீர்



# கம்போடியர்களின் நீர் மேலாண்மை

கொள்ளவு கொண்ட இந்த ஏரி, இப்போது பயன்பாட்டில் இல்லை. இதனால் அதில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுவது கிடையாது.

மேற்கு பேரேரி என்பது தான் கம்போடியாவில் உள்ள ஏரிகளிலேயே மிகப்பெரியது. இந்த ஏரியின் நீளம் 8 கிலோ மீட்டர். அகலம் 2.2 கிலோ மீட்டர். 1,760 ஹெக்டேர் பரப்பளவு உள்ள இந்த ஏரியில் 51.2 கோடி கன மீட்டர் தண்ணீரை தேக்கி வைக்க முடியும். இப்போதும் இந்த ஏரி செயல்பாட்டில் உள்ளது.

சீ பிளேன் எனப்படும் விமானங்கள், தண்ணீர் பரப்பில் இருந்து புறப்பட்டுச் செல்லும். தண்ணீர் பரப்பிலேயே வந்து இறங்கும். அத்தகைய விமானங்கள் இந்த ஏரியின் தண்ணீர் பரப்பில் இருந்து புறப்பட்டுச் செல்வதையும், அந்த தண்ணீரில் வந்து இறங்குவதையும் அதிசயமாகப் பார்க்கலாம்.

இத்தகைய பிரமாண்ட ஏரிகளில் தேக்கி வைக்கப்பட்ட தண்ணீரை அந்தக்காலத்து மன்னர்கள் எவ்வாறு வயல்களுக்கு முறை வைத்து வினியோகம் செய்தார்கள் என்ற தொழில்நுட்பம் இன்னும் முழுமையாகக் கண்டறியப்படவில்லை.

ஏரிகளில் இருந்து கால்வாய்கள் மூலமாக தண்ணீர் அனுப்பப்பட்டு இருக்க வேண்டும். அந்தக்கால்வாய்கள் எங்கே அமைந்து இருந்தன? அவற்றின் மூலம் தண்ணீரைக் கட்டுப்படுத்தி அனுப்ப என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பவற்றைக் கண்டுபிடிக்க தொடர்ந்து ஆய்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

1992ம் ஆண்டு கிறிஸ்டோப் போட்டீர் என்பவர் கம்போடியாவில் கோவில்கள் பற்றிய ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவர், கம்போடியர் களின் நீர் மேலாண்மையில் மனதைப் பறிகொடுத்து, அது பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்காக அங்கோர் நகர் முழுவதும் மோட்டார் சைக்கிளிலும் நடந்து சென்றும் பார்வையிட்டார்.

அப்போது அவர், பல கால்வாய்கள் அந்தக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கண்டறிந்து அறிக்கையாக வெளியிட்டார்.

2000ம் ஆண்டில் பிளெட்சர், டேமியன் இவான்ஸ் ஆகியோர் நாசாவின் ரேடார் உதவியுடன் ஆய்வு நடத்தி, மண்ணுக்குள் மறைந்து கிடந்த கால்வாய்கள் தொடர்பாக பல தகவல்களை வெளியிட்டனர்.


கம்போடியர்களின் நீர் மேலாண்மை குறித்து உலக அளவில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கம்போடிய மன்னர்கள் நீர்ப்பாசன முறைக்கு பயன்படுத்திய தொழில்நுட்பம் என்ன என்பது இன்னும் சில ஆண்டகளில் முழுமையாகக் கண்டுபிடிக்கப்படலாம்.

ஆனால், அந்தத் தொழில் நுட்பத்திற்கு அடிப்படையாக அமைந்தது பழங்காலத் தமிழர்களின் செயல்பாடுகள் தான் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை.

விவசாயத்திற்குத் தேவையான ஏரிகளை அமைக்கும் முறையை தமிழர்களிடம் இருந்து கற்றுக்கொண்டது போலவே, சிற்பக்கலை, இந்தியாவில் பிரபலமாக இருந்த சமஸ்கிருத மொழி, லிங்க வழிபாட்டுடன் கூடிய ஆன்மிகம் ஆகியவற்றையும் ஏற்றுக்கொண்ட கம்போடிய மன்னர்கள், அவற்றை அப்படியே பயன்படுத்தாமல், அவற்றில் தங்களது முத்திரையையும் பதித்து சாதனை படைத்தார்கள் என்பதை, கம்போடியாவில் உள்ள கோவில்களில் காணமுடிகிறது.

அது பற்றிய தகவலை அடுத்துப்பார்க்கலாம்





# அருந்தலைவர் இரா.நல்லகண்ணு

சுதந்திரப் போராட்டத்தியாகி, மூத்த கம்யூனிஸ்ட் தலைவர், எழுத்தாளர், சாதிய ஒடுக்குமுறை மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர், மனிதநேயப் பண்பாளர், ஆகச் சிறந்த அரசியல்வாதி, ஆகச்சிறந்த அரசியல்வாதி, எளிமையின் உருவம், இந்திய கம்னியூஸ்ட் கட்சியின் முன்னாள் தமிழ் மாநிலச் செயலாளர்.

எதிர்க் கட்சிக்காரர்களும் கண்ணியத்தோடு அணுகி மதிக்கும் மாண்புமிகு மனிதர், தோழர் என அன்போடு அழைக்கப்படும் மாமனிதர் திரு. இரா. நல்லகண்ணு.

1925ஆம் ஆண்டு தூத்துக்குடி அருகேயுள்ள திருவைகுண்டத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் நல்லகண்ணு. தந்தையான இராமசாமி அழுத்தமான வைணவ பக்தர். தந்தை வழியில் சைவ உணவுக்கு மட்டுமே பழக்கப் பட்டு வளர்ந்த நல்லகண்ணு 1948-49 களில் தலை மறைவாக இருந்த கால கட்டத்தில் மக்கள் கொடுக் கிற எந்த உணவாகினும் சாப்பிடத் தொடங்கினார். பின்னாளில் மீன் பிரியராக மாறிவிட்டார். வ.உ.சி.யின் சுதந்திரப் போராட்டம் இவருக்கு எட்ட அப்போதே போராட்டக் களங்களை அலங்கரித்தார்.

இளம் வயது மாணவனாக திருவைகுண்டம் கார்னேசன் (கேஜிஎஸ்) பள்ளியில் படித்தார். பள்ளியில் படிக்கும் போது அந்தப் பள்ளி நிர்வாகம் மற்ற மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு ஆங்கிலேயருக்கு ஆதரவாக நாடக ஒத்திகை நடத்தியபோது தானும் பல மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததற்கு அந்தப் பள்ளி நிருவாகத்தால் விலக்கப் பட்டார்.

வளர்ந்து வந்த நல்லகண்ணு திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேர்ந்தார். இருபத்து இரண்டு வயதான இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத் தில் பங்கேற்று வெள்ளையனே வெளி யேறு போராட் டத்தின் போது அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தமை யால் கல்லூரியிலிருந்தும் வெளியேற்றப் பட்டார்.

திருவைகுண்டம் பகுதி யில் இரண்டாயிரம் நெல் மூட்டை யைப் பதுக்கி வைத்திருப்பதைக்கண்டு பிடித்து ஜன சக்தி பத்திரிகை யில் எழுதினார். அதைப் படித்த மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுத்த அத்தனை மூட்டை களையும் பறிமுதல் செய்தார். இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து இனிமேல் மக்களுக்காக முழு நேரமும் உழைப்பதென்று முடிவெடுத்துத் தன் தந்தையிடம் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினார்.

காங்கிரசு இயக்கச் சிந்தனையை ஏற்றுப் போராட்டங்களில் கலந்து கொண்டாலும் 1943 இல் பொதுவுடைமை இயக்கம் மீதான தாக்கம் அதிகரித்த தால் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். அந்த இயக்கமும் அவரை அணைத்துக் கொண்டது.

அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய இந்தப் போராளி கம்யூனிஸ்ட் வருகையின் பின்பு எடுத்த எடுப்பிலேயே விவசாயிகள் போராட்டத்தில் இறங்கி விட்டார்.


ஆயுதப் போராட்டத்தால் தான் புரட்சியைக் கொண்டு வரமுடியும் என்று கருதிச் செயல்பட்ட காலம். போராட்டக் காலகட்டத்தில் தோழர் ஒருவரின் வீட்டில் தலைமறைவாக பதுங்கியிருந்த நல்லகண்ணுவைக் கைது செய்தது காவல்துறை. கைது செய்த காவல்துறை, தலைகீழாகத் தொங்கவிட்டு கடுமையாகத் தாக்கி, அவரது மிடுக்கான மீசையைப் பொசுக்கியும் முடிகளைப் பியத்தும் துன்பப்படுத்தியது. காவல் துறையினர் நடத்திய சித்திரவதையே நல்ல கண்ணு அவருடைய மீசையைத் துறக்கக் காரண மானது.

அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடியதால் பொய்வழக்குப் போடப்பட்டு நல்லகண்ணு, தோழர் பாலதண்டாயுதம் உள்ளிட்ட 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் சிறையில் இருந் தார். சிறையில் இருந்தபோது புத்தக வாசிப்புப் பழக்கம் பற்றிக் கொண்டது. போராட்டக்காரராகச் சிறையிலி ருந்து வெளிவந்த நல்லகண்ணுவுக்குப் பெண் கொடுக்க முன்வந்தவர் சாதி ஒழிப்புப் போராளியான அன்னச் சாமி.

1958 ஆம் ஆண்டு நெல்லையில் திருமணமும் நடந்தது. கட்சியின் இலட்சியங்களை உணர்ந்து வளர்ந்த ரஞ்சிதம் அம்மையார் வாழ்க்கைத் துணை யாக மட்டுமின்றி நல்லகண்ணுவுக்கு உற்ற தோழரா கவும் இருந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழராகத் திகழ்ந்த நல்லகண்ணு. நிலமற்ற ஏழை விவசாயிகளுக் குப் பண்ணையார் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி நிலம் பெற்றுத் தந்தது, நாங்குநேரி வானமாமலை கோயிலுக்குள் ஒடுக்கப்பட்ட மக்களை அழைத்தச் செல்லும் போராட்டம், சாதிய வன்மங் களுக்கு எதிரான போராட்டம், பண்ணையார்களிடம் வேலை செய்ய வேலையாட்களுக்கான உரிமையை நிலைநாட்டும் போராட்டம், செருப்பணிந்து பொது வீதிகளில் நடக்கும் போராட்ட மென்று நல்லகண்ணு நடத்திய போராட்டங்கள் ஏராளம்.



1999 ஆம் ஆண்டு தென் மாவட்டக் கலவரங்களின் போது ஒரு சாதிக்காரர் சொல்லப்பட்டால சம்பந்தமே இல்லாமல் எதிர்சாதியில் ஒருவர் கொல்லப்படுவ தென்று தொடர் கொலைகள் விழுந்தன. நல்லகண்ணு வின் மாமனாரும் சாதி ஒழிப்புப் போராளியுமான அன்னச்சாமியும் அப்படி வெட்டிக் கொல்லப்பட்டார். நல்லகண்ணு உணர்ச்சி வசப்பட்டிருந்தால் கலவரம் மேலும் பெரிதாகியிருக்கும். உள்ளூர்க்காரர்கள் செய்திருக்கவே மாட்டார்கள் என்று உறுதியாக நின்றதால் கலவரம் ஓய்ந்தது.

மாமனார் மரணத்துக்கு அரசு கொடுத்த இழப் பீட்டையும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட இரு சமூகக் குழந்தைகளின் கல்வி உதவிக்கே கொடுத்து விட்டார் நல்லகண்ணு.

சுற்றுச் சூழலில் மிகுந்த அக்கறை கொண்ட இவர், குற்றாலம் அருவிக்கு அருகில் ரேஸ்கோர்ஸ் அமைக்கும் முயற்சி நடந்ததை 1985 ஆம் ஆண்டு தாமரை பத்திரிகையில் கட்டுரை எழுதியே தடுத்து நிறுத்தினார். 2010 ஆம் ஆண்ட தாமிரபரணி ஆற்றில் மணல் கொள்ளையைத் தடுக்க அவரே உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஆஜராகி வாதாடி தடை வாங்கினார்.

திருவைகுண்டம் அணையைத் தூர்வாரும் போர்வையில் மணல் எடுக்கப் படுவதற்கு எதிராகப் போராடினார். தன் மகளின் காது குத்து நிகழ்வின் போது கூட வெறுங்கையுடன் நின்று பிறகு நண்பர் சிவசுப்ரமணியத்துடன் கடைக்குப் போய் கவரிங் கடுக்கன் வாங்கிக் கொண்டு போன வாழ்க்கையும்

நல்லகண்ணுவின் வாழ்வில் நடந்தது.

பணத்தை எப்போதுமே துச்சமாகத்தான் பார்த்தார். அவரது 80 ஆவது பிறந்தநாளை முன்னிட்ட ஒரு கோடி ரூபாயை வசூலித்துக் கொடுத்து கட்சி. அதைக் கட்சிக்கே திருப்பிக்கொடுத்து விட்டார் நல்லகண்ணு.

தமிழக அரசு அம்பேத்கார் விருதும் ஒரு இலட்ச ரூபாயையும் வழங்கியது. பாதியைக் கட்சிக்கும் மீதியை விவசாயத் தொழிலாளர் சங்கத்துக்கும் கொடுத்துவிட்டார்.

1967 மற்றும் 1977 சட்டமன்றத் தேர்தலில் அம்பாசமுத்திரத்திலும் 1999 மக்களவைத் தேர்தலில் கோவையிலும் போட்டியிட்டு பணமுதலைகளால் மூன்று தேர்தலிலும் தோல்வியுற்றார். 2016 ஆம் ஆண்டு தன் மனைவி ரஞ்சிதத்தின் மறைவுக்குப் பின்னும் துவண்டு விடாமல் முன்பைப் போலவே விவசாயிகளின் பிரச்சினைகள் தொடங்கி காவிரி, முல்லை பெரியாறு, கூடங்குளம் அணு உலை, மீத்தேன், நியூட்ரினோ, மீனவர் மற்றும் அரசுப் பேருந்து ஊழியர்கள் பிரச்சினை வரை அனைத்திற்கும் முன்னின்று ஒரு இளைஞனைப் போல் பங்கேற்று அனைவரையும் வழி நடத்துகிறார்.

93 வயதிலும் எளிய வாழ்க்கை, பொதுவாழ்வில் நேர்மை, இலட்சியத்தில் உறுதி, ரயில் மற்றும் அரசுப் பேருந்தில் பயணம் தொடர்ந்து வாடகை குடியிருப்பிலேயே தங்கியிருத்தல், எளிய மக்களுக்காக எண்ணற்ற ஊர்களில் எண்ணிலடங்கா போராட்டங்களென்று வாழ்கிற நல்லகண்ணு தற்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கிறார்.

போராட்டம், பொதுக்கூட்டம், புத்தக வெளியீடு, திருமணம், துக்க நிகழ்ச்சிகளென்று தன் நலத்தையும் பொருட்படுத்தாது தமிழகம் முழுவதும் பம்பரமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார் அய்யா நல்லகண்ணு.

சுமார் 25 ஆண்டுகள் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும், 13 ஆண்டுகாலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராகவும் இருந்து இப்போது மத்திய கமிட்டி உறுப்பினர் மற்றும் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் பொறுப்பிலும் இருக்கிறார். தன் இறுதி மூச்சு உள்ள வரை தமிழக மக்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேனெனச் சொல்லி ஓயாது உழைத் துக் கொண்டிருக்கும் அய்யா நல்லகண்ணு நீண்ட ஆயுளோடும், நல்ல உடல் நலத்தோடும் வாழ இயற்கையிடம் கையேந்தி அந்த மாமனிதருக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்போம்.

**நன்றி புலனம்.**



**அறிஞர் அண்ணா**

தாய் சேய் நலவிடுதி ஒன்றின் திறப்பு விழாவில் கலந்து கொள்ள அறிஞர் அண்ணா தாமதமாக வந்தார். பிறகு விழாவில் பேசிய அண்ணா, தனது தாமதத்திற்கான காரணத்தைச் சொன்னார்.

பெண்கள் ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் காலம் தாழ்த்தி இடைவெளி விட்டுதான் அடுத்த குழந்தை பெற வேண்டும். அதனை நினைவுபடுத்தவே காலந்தாழ்த்தி தாமதமாக வந்தேன் என்றார். நகைச்சுவையாக சொல்லி கூட்டத்தைக் கலகலக்க வைத்தார்.

**காமராசர்**

இந்திய விடுதலைக்காக ஒன்பது ஆண்டுகள் சிறைப் பட்டவர். மூன்று முறை தமிழக முதல்வர்.

மதிய உணவு, இலவசக் கல்வி, நீர்ப்பாசனம், தொழிற் புரட்சியின் தந்தை. இந்தியாவின் இரண்டு பிரதமர்களைத் தேர்ந்தெடுத்த கிங்மேக்கர்.

வாடகை வீட்டில் அவர் மறைந்தபோது அவரின் சொத்தின் மதிப்பு 110ரூபாய்.

**கட்சிகள்**

'தொண்டுதான்' இலட்சியம் என்றால் அது இயக்கம்.

'பணம், காசு, பதவி' என்றால் அது நிறுவனம். இந்த நாட்டில் இயக்கமாக தொடங்கப்பட்டவையெல்லாம் நிறுவனங்களாகி விட்டன.

**முக்கனி**

தமிழ் இலக்கியங்களில் முக்கனிகளை மா, பலா, வாழை என்று வரிசைப்படத்தியதன் காரணம் தெரியுமா?

நிறைய கிளைகளைக் கொண்டு ஒவ்வொரு கிளைகளிலும் பல கனிகளைத் தருவதால் 'மா' முதலிடம். பல கிளைகளில் மட்டும் கனிகளைத் தருவதால் 'பலா' இரண்டாமிடம் ஒரே ஒரு குலை தருவதால் 'வாழை' மூன்றாம் இடம்.

**வி.ஜே. ஜார்ஜ், அமைந்தகரை.**

# பதக்கங்கள் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்த மாற்று திறனாளி ஜெர்லின் அனிகா



மதுரை அவனியாபுரத்தை சேர்ந்தவர் ஜெர்லின் அனிகா, காது கேளாத, வாய் பேசமுடியாத மாற்றுத்திறனாளி மாணவி யான இவர், இந்திய அணிக்காக சீனாவில் நடந்த உலக பேட்மிண்டன் சாம்பியன் ஷிப் போட்டியில் கலந்து கொண்டு ஒரு தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என 4 பதக்கங்களுடன், சாம்பியன் பட்டத்தையும் தன் வசப்படுத்தியிருக்கிறார்.

ஜெர்லின் அனிகா, ஏற்கனவே 2 முறை இந்திய அணிக்காக விளையாடியிருக்கிறார். அப்போது பதக்கம் எதுவும் கிடைக்க வில்லை என்றாலும் மனம் தளராமல் போராடி தற்போது சீனா வில் சாதித்திருக்கிறார். அவரது சாதனைகளுக்கு துணை நிற்கும் அவரது தந்தை யரட்சகனுடன் அவரை சந்தித்தோம். நாம் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் சைகை முறையில் சளைக் காமல் அவரது தந்தையிடம் பதிலளிக்க தந்தையோ நமக்கு அதை விவரித்தார்.

**உங்களுக்கு பேட்மிண்டன் விளையாட்டில் ஆர்வம் வந்தது எப்படி?**

என் அப்பா கிரிக்கெட்டில் அதிக ஆர்வம்கொண்டவர். தேசிய அளவிலான போட்டிகளில் விளையாடி இருக்கிறார். அவரது நண்பர்களில் சிலர் பேட்மிண்டன் விளையாடுவார்கள். நான் 5-வகுப்பு படித்த போது, ஒருமுறை என் தந்தையுடன் மைதானத் திற்கு சென்றிருந்தேன். அங்கே எனது தந்தையின் நண்பர்களில் சிலர் ஒருபுறம் பேட்மிண்டனும், இன்னொரு புறம் கிரிக்கெட்டும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதில் நான் பேட்மிண்டன் போட்டியை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். இதனை என் தந்தை கவனித்தார். வீட்டிற்கு வந்த பிறகு என்னிடம் பேட் மிண்டன் விளையாட்டில் ஆர்வம் இருக்கிறதா என்று கேட்டார். ஆமாம் என்றேன். அன்று ஏற்பட்ட ஆர்வம் தான். இன்றுவரை குறையாமல் என்னை பல சாதனைகளை செய்யவைக்கிறது.

**தொடக்கத்தில் உங்கள் விளையாட்டுத்திறன் எப்படி இருந்தது?**

தொடக்கத்தில் நூற்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு ஒரு பரிசு கூட வாங்காமல் இருந்தேன். ஆனாலும் நான் சோர்ந்துபோகவில்லை. என் தோல்விக்கு என்ன காரணம் என்று வீட்டிற்கு வந்ததும் ஆராய்வேன். முதலில் மாற்றுத் திறனாளிகளுடன் விளையாடாமல் சராசரி வீரர், வீராங்கனை களுடன் விளையாடினேன். அதில் இருந்து பல நுணுக்கங்களை கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு போட்டியையும் வெற்றியாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டேன். அதன்பின்னர் வெற்றி என்வசப்பட்டது.

**தினமும் எத்தனை மணி நேரம் பயிற்சி மேற்கொள் வீர்கள்?**

விளையாட தொடங்கியதில் இருந்து சரவணன் என்பவர் தான் என்னுடைய பயிற்சியாளர். அவருடைய வழிகாட்டுதலின் படிதான் தற்போது வரை விளையாடிக்கொண்டிருக்கிறேன். காலை 5 மணி முதல் 8 மணி வரையும். மாலையில் 4 மணி முதல் இரவு 10 மணி வரையும் பயிற்சி மேற்கொள்கிறேன். தினமும் 9 மணி நேரமாவது பயிற்சி செய்கிறேன்.

**உங்கள் குடும்பத்தினரை பற்றி..?**

அப்பா, ஜெயரட்சகன் சுயதொழில் செய்து வருகிறார். அம்மா லீமாரோஸ்லின், இல்லத்தரசி, அண்ணன் ஆகாஷ் கல்லூரியில் படித்து வருகிறார். நான், மதுரை மாநகராட்சி அவ்வை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10-ம் வகுப்பு படிக்கிறேன். எனது தாத்தா பாட்டி இருவரும் அரசு பள்ளியில் ஆசிரியர்களாக வேலை பார்த்த வர்கள். அதன் காரணமாக என்னையும் அரசு பள்ளியில் சேர்த்து விட்டார்கள். பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர் களும் எனக்கு உற்சாகம் தருகிறார்கள்.

நான் கொஞ்ச நேரம் படித்தாலும் நன்றாக புரிந்து கொள் வேன். அதனால், படிப்பு பற்றி எந்த கவலையும் கிடையாது. விளையாட்டு தான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். அதிலும் ஒரு கை பார்த்து விடுவேன். போட்டியில் இறங்கும் முன் அமைதியாக இருப்பேன். இறங்கி விட்டால் வெற்றி மட்டும் தான் இலக்கு. இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு நகரங்களில் விளையாடி உள்ளேன். மலேசியா, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளிலும் விளையாடி இருக்கிறேன். எல்லா போட்டிகளுக்கும் என்னுடன் என் தந்தையும் வந்து விடுவார். அவர் அருகில் இருந்து உற்சாகப்படுத்துவது எனக்கு கூடுதல் சக்தியை அளிக்கும்.

**இந்திய அணிக்காக விளையாடிய அனுபவம்...?**

2017-ம் ஆண்டு குஜராத்தில் நடந்த போட்டியில் கலந்து கொண்டு, இந்திய அணிக்காக தேர்வு செய்யப்பட்டேன். மாற்றுத் திறனாளிகள் பிரிவில் தமிழகத்தை சேர்ந்தவர்களில் நான் மட்டுமே தேர்வு செய்யப்பட்டேன். அது மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருந்தது. இந்திய அணிக்காக விளையாடுவேன் என்று கனவில் கூட நினைத்து பார்க்கவில்லை. அந்த போட்டியில் கலந்து கொண்டு 5-வது இடத்தை பிடித்தேன். 2018-ல் நடந்த சர்வதேச போட்டியில் இந்திய அணிக்காக விளையாடி 2 வெள்ளி, 1 வெண்கல பதக்கத்தை பெற்றேன். தற்போது சீனாவில் நடந்த போட்டியில் தங்கப்பதக்கத்தை பெற்றதுடன், 2 வெள்ளி, ஒரு வெண்கலத்தையும் பெற்றிருக்கிறேன்.

என்னுடைய ரோல்மாடல் பி.வி. சிந்து, அவரை போன்று இந்திய அணிக்கு விளையாடி பெருமை சேர்க்க வேண்டும் என்பது ஆசை. அவருடைய விளையாட்டுகளை டி.வி.யில் பார்த் தால் அதனை முழுமையாக கவனிப்பேன். அவருடைய ஒவ் வொரு அசைவையும் முன்மாதிரியாக எடுத்துக்கொள்வேன்.

**மறக்க முடியாத பாராட்டுகள்...?**

சீனாவில் தங்கம் வென்ற என்னை நடிகர் விஜய் சேதுபதி நேரில் அழைத்து பாராட்டினார். அப்போது அவர் நீ இன்னும் நிறைய சாதிக்க வேண்டும். இந்தியாவிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றார். அது என்னால் மறக்க முடியாதது. அது போல், ஐதராபாத்தில் நடந்த போட்டியில் கலந்துகொள்ள சென்ற போது பி.வி.சிந்துவும் என்னை பாராட்டினார்.

**உங்களின் அடுத்த இலக்கு...?**

ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணிக்காக விளையாடி தங்கத்தை பெற வேண்டும் என்பது தான் என் இலக்கு. அதை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கிறேன். ஒலிம்பிக்கில் தங்கம் வென்று தமிழகத்திற்கும் பெருமை சேர்ப்பேன். சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்றால் சாதாரண வீராங்கனைகளுக்கு கிடைக்கும் மரியாதை எங்களுக்கு கிடைப்பதில்லை. மாற்றுத் திறனாளிகள் போட்டியில் சாதிப்பது என்பது பெரிய விஷயம். எல்லோரையும் சரிசமமாக பாராட்ட வேண்டும் என்பது தான் எங்களின் கோரிக்கை. ஒவ்வொரு வருடமும் என்னுடைய செலவு மட்டும் ரூ.8 லட்சத்தை தாண்டிவிடுகிறது. நான் மேலும் சாதிக்கும் விதத்தில் அரசு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்.

அனிகாவின் ஆசைகள் நிறைவேறட்டும்!

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# பெ.மணியரசன் எழுதிய



பன்மை வெளி

## புதிய வெளியீடு

**சூ**ழ்ந்துள்ள துயரங்களைத்
தொகுத்தால் போதாது!
தூக்கி எறியும் வழிசொல்ல வேண்டும்!

வாக்குச் சாவடிக்கு வாருங்கள்
வழிகாண்போம் என்பது
வஞ்சித்து விட்ட பழைய பாதை!

வரலாற்றை உருவாக்கும் ஆற்றல்
மக்கள் எழுச்சிக்கே உண்டு!

சிந்திக்கத் தெரிந்தவர்கள்
செயல்பட அஞ்சுகிறார்கள்
சாகசங்கள் செய்து யாராவது
சாதிக்க மாட்டார்களா
என்று ஏங்குகிறார்கள்!

கருத்தரித்த தாய்தான் பெற்றாக வேண்டும்
கருத்தைச் சுமந்தவர்கள்தாம்
களத்திற்கு வரவேண்டும்
இதோ உங்களுக்கான கைவாள்!

**சிந்திக்கத் துணிக!**
**செயற்களம் வருக!**

*– பெ. மணியரசன்*

**விலை ரூ 60/-**




**பக்கம் – 88**
(படங்களுடன்)

**தொடர்புக்கு: 044 24742911 / 98408 48594 / 94439 18095**

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.




பெருமையோடு வாழ்த்தும்

# முற்றம் மாத இதழ்

ஆசிரியர் குழுவினர்